# சுடர்



ராஜன் புத்தகசாலை
12, பஸ் நிலையம் - யாழ்ப்பாணம்

ஆடி ஆவணி 1981

விலை
ரூபா-200

# வாசகர் வாய்மொழி

## காக்கவைக்க வேண்டாம்

ஆனி சுடர் அற்புதம். அத்தனை அம்சங்களும் பாராட்டப்பட வேண்டியவை. மணிக்கதைகள் சுடருக்கு மகுடம் வைத்தாற்போல் இருந்தன. ஆசிரியத் தலையங்கம் அத்தனையும் உண்மைகள். தமிழன் எதற்கும் தயாராக வேண்டும் என்னும் கருத்து சிந்திக்க வேண்டியதே. சுடரை எதிர்பார்த்து இருக்கும் எங்களை அதிக நாட்கள் காத்திருக்க வைக்காதீர்கள்.

கனக. பிரதீபன்
கொக்குவில் மேற்கு
கேணியடி

## இரத்தம் கொதிக்கிறதே!

ஆனி மாதச் சுடரின் 'இடம் பெற்ற இடைவேளைக்குப் பின்' கண்டு கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியவில்லை. 'விடுதலை' மணிக்கதை வெகு ஜோர்; பரிசுக்குரியதே 'நாங்கள்' கவிதை இன்றைய மலையக சமுதாயத்தின் அவல நிலையை அழகாக படம் பிடித்து உணர்த்துகின்றது 'அரி'யின் மனம் விட்டு சில வார்த்தைகள் நெஞ்சை நெகிழவைப்பதோடு இரத்தத்தையும் கொதிக்க வைக்கிறது. மொத்தத்தில் அத்தனையும் தமிழ் முத்துக்களே.

பி. தமிழ்தாஸன்,
நியுபக் எஸ்டேட், எல்ல

## கரிகாலன் பணிதொடர பிரார்த்தனை

ஆனி சுடர் கண்டேன். கருத்தை கவரும் கவிதைகள். உள்ளத்தை மகிழவைக்கும் சிறுகதைகள். நன்கு சேர்க்கப்பட்டுள்ளன. அத்தோடு அரியின் வார்த்தைகள் அபாரம்; அற்புதம். மனம் விட்டுத்தான் விளாசுகிறார். கரிகாலன் அவர்கள் பதில் சொல்லும் விதமே மிக அலாதியானது. அவரின் பணி என்றும் தொடர எனது பிரார்த்தனைகள்.

அ. தயாபரி
கொக்குவில் மேற்கு

## பயனுள்ள கட்டுரை

ஆனிச்சுடர் தித்தித்தது - கவிச்சரங்கள் - திக்குவல்லையின் கதை — சிறப்பாக இருந்தன. பொன். பூலோகசிங்கத்தின் கட்டுரை எங்களைப் போன்ற எழுத்தாளர்க்கு உதவக் கூடியதே தரம் பிரித்து சிறப்பாக பிரசுரித்து மென்மேலும் சுடர் வளர என் வாழ்த்துகள்.

இ. மகேந்திரன்.
(முல்லை அமுதன்)
கவ்வியங்காடு,

## முகங்களை காட்டினால் என்ன?

சுடரில் எழுத்துப் பிழைகள் அதிகரிப்பதை கண்டீர்களா? இலக்கிய பிரச்சினைகளை இவ்வளவு சீக்கிரம் முடித்திருக்க வேண்டுமா? புது வண்ணங்கள் - புதிய எண்ணங்கள் சுடரின் சுடரை பிரகாசிக்கச் செய்கின்றன— ஐயா உங்கள் முகங்களை சுடரில் காட்டினால்தான் என்ன? அட இந்த அரியையும் சேர்த்துத்தானய்யா சொல்கிறேன்.

பா. கிரான்ஜீவன்.
புதுக்கமம்

## ஒழுங்காக மலராயோ?

அமர்முடுகல் நடையிலுந்த
ஆடியதன் எல்லையினில்
ஆறுதலாய் வந்துதித்த
ஆனியின்பச் சுடரிதழே

நீரலையாய் என்னுணர்வில்
நீந்திவரும் மென்சுடரே
ஆவர்த்தன ஒழுங்குதன்னில்
அவனியில் நீ மலராயோ.........?

ச. புஷ்பகுமார்
உடுத்துறை தெற்கு
செம்பியன்பற்று

## மனதைத்தொட்டன!

அனலை ஆறு இராசேந்திரத்தின் கதை நெஞ்சைத் தொட்டது. அரியின் மனம்விட்டுச் சில வார்த்தைகளும், தலையங்கமும், நகைச்சுவையாக இன்றைய நிலையை விபரித்துள்ளமை மனதைத்தொட்ட விடயங்கள்.

ச. முருகானந்தன்
கரவெட்டி தெற்கு

(33ம் பக்கம் பார்க்க)

சுடர்
CHUDAR
(இலக்கியத்திங்களிதழ்)

ஆசிரியர்: கரிகாலன்
துணை ஆசிரியர்: அரி

வள்ளுவராண்டு: 2012
சுடர்: 7
ஒளி: 4,5
ஆடி, ஆவணி 1981
தொடக்கம்: சித்திரை 1975

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

# மரணயோகம்!

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து சிங்கள அரசின் தலைவர் ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதாக அறிகின்றோம். பாரிய பிரசசினைகள் இருக்கின்றன. பேசித்தீர்க்க முடியுமென்றால, சீரியமுறையில் பேசித்தீர்க்க வேண்டியதுதான். பேசித்தீர்ப்பது என்று தீர்மானித்தபின் அரசின் தலைவர் — நாட்டின் தலைமை நிர்வாகி — ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன்தான் பேச வேண்டும் மறுப்பதற்கில்லை.

ஆயினும், கேள்வியொன்று கிளர்கிறது. பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்குஇதுதான் அமிர்தயோகமா?

யூன் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் தாக்குண்ட தமிழர்களின் புண்கள் ஆறுவதற்குள் யூலை மாதத்தில் மட்டக்களப்பில தாக்குதல். மட்டக்களப்புத் தமிழனின் இரணத்திலிருந்து இரத்தம் வடிந்து கொணடிருக்கும் போதே ஆகஸ்ட் மாதத்தில் மலைநாட்டுத் தமிழர்மீது தாக்குதல் — நாடெங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு, கத்திக்குத்து, அடி, உதை அச்சுறுத்தல்......... இத்தியாதி.

பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் அனைத்தையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இந்தப்பஞ்சமா பாதகங்களுக்கு பாத்திரவாளிகளாகவும் சூத்திரதாரிகளாகவும் காவல்—ஆயுதப் படையினரும் அரசியல் புள்ளிகளும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்.

* தாக்கிய வர்க்கம் தாக்குண்ட வர்க்கத்தைத் தமது தமிழ்த் தரகர்கள் மூலமாகப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது. தரகர்களோ மேட்டுக்குடி மேதாவிகள் — கலாநிதிகள். இந்தநாட்டுத் தமிழ்க் குடிமக்களின் அபிலாசைகள் அவர்களுக்குப் புரியுமோ என்னவோ. அடிபட்ட வர்க்கம் அச்சமும் பீதியும் அலங்கோலமுமாக உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு உரிமைப் பிரச்சினை பற்றிப் பேசக்கூடுமா?

* சிங்களப் பேரினவாதம் தமிழன்மீது அடிக்கடி நடாத்திவந்த தாக்குதல்களையிட்டுச் சலனமற்றிருந்த நாகரிக உலகில் இன்றோ அர்த்தமுள்ள சலசலப்பு கேட்கிறது. 'இலங்கைககு இப்போ வரலாமா — வேண்டாமா?'' என்று பிரித்தானியப் பேராசிரியர் சபலப்பட்டுக் கொண்டு நிற்கிறார். பக்கத்திலுள்ள பாரதத்தின் பாராளுமன்றத்தில் நாளாந்தம் பரபரப்பு! இந்திய ஜனாதிபதி சஞ்சீவரெட்டி 'பிறகு வருகிறேன்' என்று தன் இலங்கை விஜயத்தைப் பின்போட்டிருக்கிறார். தமிழ் நாட்டிலும் புதுவையிலும் எமது உடன்பிறப்புக்கள் உணர்ச்சிப் பிழம்பாய் நிற்கிறார்கள். முதல்வர் எம். ஜி. ஆரும் கலைஞர் கருணாநிதியும் இணைந்துகொண்டு பிரதமர் இந்திரா அம்மையாரை சந்திக்கவிருக்கிறார்கள். இலங்கை அரசின் கெடுபிடிகளுக்கு ஆளான வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஏதேச்சாதிகார ஆட்சியின் அட்டூழியங்கள் பற்றி தமது ஏடுகளில் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியைப் பக்குவமாய் பேணவேண்டாமா?

* சிங்கள வெறியாட்டமொன்று நடந்து ஓய்ந்துகொண்டிருக்கிறது. இவ்வேளையில் 'சமாதானத்தைப் பேணுவதற்காக சமரசம்' என நாம் கூறினால், அமைதிக்கு பஙகம் விளைவித்ததில் நாமும் பங்காளிகள் என்று அர்த்தமாகிவிடாதா?

* எமது அயல்நாட்டு நண்பர்கள் — ஆதரவாளர் மத்தியில் அவநம்பிக்கை தோன்றாதா?

வன்செயல்கள் மூண்டெழுந்து எமது மக்களை வதைத்த வேளையில் கண்டி பெரஹரா காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டிருந்த ஜனாதிபதி ஜயவர்த்தன, கண்டியிலிருந்து கொழும்பு திரும்பிய கையுடன் கனடாவிலிருந்து டாக்டர் ஏ. ஜே. வில்சனை அவசரமாக அழைத்து த. வி. கூட்டணித் தலைவர்களிடம் தூது அனுப்பினாரென்றால் சோழியன் குடுமி சும்மா ஆடியிருக்குமா?

எமது தலைவர்களுக்குப் பணிவுடன் கூறுகிறோம். அமிர்தயோகம் வரட்டும்—

# எழுவோம் நாங்கள்

கவிஞர் செ. குணரத்தினம்

ஆண்டவர்கள் நாமிந்த அழகு நாட்டில்
அனாதைகளாய்ப் போனோமே! துரியர் முன்னால்
பாண்டவர்கள் ஆனோமே தமிழே நாங்கள்
படுந்துயரம் கொஞ்சமல்ல! எங்கள் வாழ்வில்
மூண்டெழுந்த நெருப்பின்னும் தணியவில்லை
மூவேந்தர் பரம்பரையர் எனும் பழைய
நீண்டபெரும் சரித்திரத்தைச் சொல்லிச் சொல்லி
நிற்பதற்கும் இடமின்றித் தவிக்கின்றோமே!

துரியனவன் சபைநடுவே துரோபதையாள்,
துடிதுடிக்கத் துட்டனவன் துயிலுரிய
தருமனுடன் தம்பியரும் பொறுமையோடு
தலைகுனிந்து சிலைகளென வீற்றிருந்தார்
அது பழைய கதையாச்சு அம்மா தாயே
ஐவர்கள்போல் பொறுத்திருந்தால் துரியரிங்கே
மது வெறியர் போலாவார் உன்னைக் கட்டி
மானபங்கம் செய்வார்கள் பொறுக்கொண்ணுது.

எது வரினும் வரட்டுமடி எழுவோம் நாங்கள்
இரண்டிலொன்று எமக்குத்தான் பார்ப்போம் ஓர் கை!
இதுவரையும் பொறுத்ததெல்லாம் போதும் போதும்!
எம் தமிழர் ஒற்றுமையை உலகம் காணப்
புறப்படுவோம் களம் நோக்கி மானத்தோடு
பூமியிலே வாழ்ந்திடுவோம் முடியாவிட்டால்
இறப்பதிலே இன்பத்தைக் காண்போம்! எங்கள்
இருந்தமிழே எங்களுயிர் உனக்காகத்தான்!

# மனம்விட்டு சில வார்த்தைகள்

"ஆர்"

'தர்மிஷ்டர்' கனவு கண்ட தார்மீக சாம ராஜ்ய யுகம் நாட்டில் உதயமாகிவிட்டதென்பதை கடந்த சில வாரங்களாக தீவடங்கிலும் நடைபெற்ற தீ வைப்புகள், வீடுடைப்புகள், கற்பழிப்புகள், இனப்படுகொலைகள் போன்ற காட்டுமிராண்டிச் சம்பவங்கள் தெட்டத் தெளிவாக்கி விட்டன.

ஸ்ரீலங்காவின் பெருந்தலைவரும், அவரின் சிஷ்ய வழித்தோன்றல்களும் அண்மைக்காலமாக ஆற்றி வந்த பேரினவாத பேச்சுகள் இத்தனை கொடிய தமிழர் சம்ஹாரத்தில்தான் வந்து முடியும் என்பது நாம் எதிர்பார்க்காத ஒன்றல்ல.

ஐ. தே. கவின் அடிமட்ட பாராளுமன்ற உறுப்பினர் பலரின் இனவாத — கொலைவெறிப் பேச்சுக்கள்; அதனைத் தொடர்ந்து வீதிச் சுவர்களை அலங்கரித்த தமிழர் விரோத சுவரொட்டிகள்; தென்னிலங்கையெங்கும் விநியோகிக்கப்பட்ட வகுப்புவாத துண்டுப்பிரசுரங்கள் எல்லாமே கொடூரமான ஒரு ஊழிக்கூத்தை — கோரத்தாண்டவத்தை அரங்கேற்றி முடிப்பதற்கு திட்டமிட்டு நடத்திய கைங்கரியங்களாகும்.

பயங்கரத்தாண்டவங்கள் அனைத்தும் ஆடி முடிக்கப்பட்டபின் அமைச்சர் ஒருவர்—அவர்தான் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் — சொல்கிறார்: 'இத்தனைக்கும் காரணம் வெளிநாட்டு சக்திகளே'' என்று; அதி உத்தமர் என்ன சொல்கிறார் தெரியுமா? ''காடைத்தனம் புரிந்தது அரசுக்கு எதிரான சக்திகளாம்''.

எப்படியிருக்கிறது சப்பைக்கட்டு?

முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் வைத்தாவது மறைத்து விடலாம்; இவர்கள் தமது வாய்க்குள் வைத்தல்லவா திணித்து மறைத்து விடப் பார்க்கிறார்கள்.

புத்தர் வழிவந்த அதி உத்தம தர்மிஷ்ட சனாதிபதி அவர்களே! அம்பாறையில் ஆரம்பிக்கப்பட்ட அட்டூழியங்கள் நாடெங்கிலும் படிப்படியாக விஸ்தரித்து விஸ்வரூபம் எடுக்கும் வரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? தர்ம ஜெயமா பண்ணிக் கொண்டிருந்தீர்கள்?

கொள்ளைக்கும்பல்கள் திளைத்து சூறையாடும்வரை — கோட்டான்கள் மனித இரத்தம் குடிக்கும் வரை உங்கள் காவற்படையினரான தர்ம வீரர்கள் எங்கு என்ன செய்து கொண்டிருந்தார்கள்? பூந்தோட்டத்தில் பூ பறித்துக்கொண்டா இருந்தார்கள்?

வேலை நிறுத்தங்கள், தொழிலாளர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறப்போகிறதென்றால் முன் கூட்டியே அவசரகால நிலையை பிரகடனம் செய்து சுயரூபத்தைக் காட்டும் அதி சக்தி வாய்ந்த சகல கலா வல்லுநரான நீங்கள் தமிழ் உயிர்கள் பல பறிபோகும் வரை தமிழர் உடைமைகள் சூறையாடப் படும் வரை — நாதியற்ற தமிழ் சாதி நாயிலும் கேவலமாக அகதிகளாக மாற்றப்படும் வரை என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ''தார்மீகத்'' துக்கு வரைவிலக்கணமும் விளக்கவுரையுமா எழுதிக்கொண்டிருந்தீர்கள்?

இனக்கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர இரு வாரங்கள் தேவைப்பட்டதற்கும் — வெளிநாட்டுச் சக்திகளும் அரசு விரோத சக்திகளும்தான் காரணமோ?

சொல்லுங்கள் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லுங்கள்; பாதிக்கப்பட்டபின் தந்த பாதுகாப்பால் என்ன பயன்? கொள்ளைக்குத் துணை போன உங்கள் கூலிப்பட்டாளத்தினரால் எரிந்த கடைகளையும் எரியுண்ட வீடுகளையும்தானே பாதுகாக்க முடிந்தது?

ருகம புகையிரத நிலையத்தில் அடுத்தடுத்து இருநாட்கள் ரயில் கொள்ளைகளும், தாக்குதல்களும் நடத்தப்பட்டன. மூன்றாவது நாள் 'ருகம நிலையத்தில் புகையிரதங்கள் தரித்து நிற்காது' என அறிவிப்பு வருகிறது.

உங்கள் ஏவற்படையினரின் இந்த இயலாமைக்கு வெளிநாட்டுச் சக்திகளும் அரசு விரோத சக்திகளும்தான் காரணமா?

உங்கள் தார்மீக லட்சணம் தமிழ் மக்களுக்கு நன்றாகப் புரிகிறது. பொருளாதார வங்குரோத்தை மூடிமறைக்க மக்களின் கவனத்தை — எதிர்ப்பை தமிழர் பால் திசை திருப்ப நீங்களும் உங்கள் சகாக்களும் கூட்டாக சேர்ந்து ஆடிய நாடகத்தால்தான் இத்தனை அனர்த்தங்களும் நிகழ்ந்து முடிந்து விட்டன என்பது நன்றாகவே புரிகிறது.

அப்பாவித்தமிழர்கள் விட்ட ஏக்கப்பெருமூச்சுக்களுக்கும் வடித்த கண்ணீருக்கும் என்றாவது ஒருநாள் நீங்களும் உங்கள் சகாக்களும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

அந்தநாள் விரைவில் வந்தே தீரும்.

# தமிழ் மண்காக்கும் தலைவர்கள்





### யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்
### திரு. சுப்பிரமணியம் நடராசா

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உறுப்பினரான திரு. சு. நடராசா அவர்கள் தமிழ் அரசுக்கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராவார். தமிழ் இனப் போராட்டங்கள் அனைத்திலும் ஈடுபட்ட பெருமை இவருக்குண்டு. 1958 இல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்; சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்தார்; 1961 இல் பனாகொட இராணுவ முகாமில் தடுப்புகாவலில் வைக்கப்பட்டார். 1964 இல் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டார்.

ஈழநாட்டிற்கென தனியான தபாற் சேவையை ஆரம்பித்து தபால் மா அதிபராக கடமையாற்றிய அதி சிறப்பு வாய்ந்த பெருமைக்குரியவர். இதனால் இராணுவத்தினராலும் தாக்கப்பட்டார்.

முன்னைநாள் மூதவை உறுப்பினராகவும் பதவிவகித்த இவருக்கு மக்கள் பணி புதியதொன்றல்ல, தந்தைசெல்வா அவர்களின் தொகுதி வேலைகளை பெரும்பாலும் இவரே அக்கறையோடு கவனித்து வந்தமை குறிப்பிடுதற்கரியது.

பொலிஸ் — இராணுவப் படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களின் சார்பாக மரண விசாரணைகளில் பங்குபற்றியமைக்காக இராணுவ அச்சுறுத்தலுக்காளாகியும் நெஞ்சுறுதியோடு தன் பணியை தொடர்ந்தவர். விடுதலை இயக்கத்தின் தீவிரவாதப் போக்குடையவரான திரு. சு. நடராசா தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டமை யாழ் நகர் செய்த தவப்பயனே'.

### மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர்
### திரு. சி. சம்பந்தமூர்த்தி


கல்குடாத்தொகுதியைச்சேர்ந்தசெங்கலடி கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட திரு சி. சம்பந்தமூர்த்தி அவர்கள், காலஞ்சென்ற கல்குடாத்தொகுதி முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினரான அமரர் பொ. மாணிக்கவாசகரின் மருமகனாவார்.

துரிதமாக செயலாற்றும் துடிப்புமிக்க இளைஞரான திரு. சி. சம்பந்தமூர்த்தி 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில், தற்போதைய உள்நாட்டலுவல்கள் அமைச்சரான திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தை எதிர்த்து முதன்முறையாக போட்டியிட்டு சில நூறு வாக்குகள் வித்தியாசத்திலேயே தோல்வியடைந்தார்.

குடியேற்ற அதிகாரியாக பதவி வகித்த திரு. சி. சம்பந்தமூர்த்தி பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்ததைத் தொடர்ந்து அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாக்கப்பட்டார். அடிக்கடி பல சிங்கள பிரதேசங்களுக்கு மாற்றப்பட்டு சிரமங்களுக்குள்ளாக்கப்பட்டதால் தன் அரச பணியை துறக்கவேண்டிய நிலைமைக்கு ஆளானார்.

எத்தடைகள் ஏற்படினும் ஏற்ற பணியை திறம்பட ஆற்றும் சக்திவாய்ந்தவர் திரு. சம்பந்தமூர்த்தி என்பதை திடமாக நாம் நம்பலாம்.

வவுனியா மாவட்ட சபை தலைவர்



## திரு. மு. சிற்றம்பலம்

வவுனியா மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவரான திரு. மு. சிற்றம்பலம், அப்பிரதேசத்தில் மிகப்பிரபலமான வழக்கறிஞராவார். வவுனியா நகரசபை உறுப்பினராகவும் துணைத் தலைவராகவும் பலவருட காலம் பணியாற்றியவர். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான திரு. மு. சிவசிதம்பரம் அவர்களின் இளவலான இவரிடம், எல்லை மாவட்டமான வன்னிப்பிரதேசத்தின் பாதுகாப்பு—அபிவிருத்தி பணிகள் ஒப்படைக்கப் பட்டிருப்பது மிகப் பொருத்தமாகும்.

வளம் கொழிக்கும் வன்னித்தாய் இவர் பணி கண்டு மகிழ்வுறுவாளாக!

முல்லைத்தீவு மாவட்ட சபை தலைவர்




## திரு .செ. மரியநாயகம்

முல்லை மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக்கும் பொறுப்பு திரு. செ. மரியநாயகம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது.

சிங்கள குடியேற்றத்திலிருந்து தமிழ் மண்ணை பாதுகாக்கும் பணியே தனது முதற்பணி என பகிரங்கமாக அறிவித்து அறைகூவல் விடுத்திருக்கும் மரியநாயகம் அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்ட கால உறுப்பினராவார். கட்சிப் பணிகளில் மிக அக்கறையோடு ஈடுபட்டுழைத்து வரும் இவர், விடுதலைப் பாதையில் வெற்றி நடைபோட எமது வாழ்த்துக்கள்!

மன்னார் மாவட்ட சபைத் தலைவர்



## திரு. பி. எம். செபமாலை

மன்னார் சேவியர், சென்பெனடிக், கல்லூரிகளின் பழைய மாணவரான திரு. பி. எம். செபமாலை, சென்பெனடிக் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவின் தலைவராக இருந்தவர்.

அடம்பன் கிராம சபையின் உறுப்பினராகவும் தலைவராகவும் பத்து வருடங்கள் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு.

விடுதலை இயக்கத்தில் மிக நீண்டகாலமாக ஈடுபாடு கொண்டுழைத்து வரும் இவர் மக்கள் பணியாற்ற முன்வந்தமை மகிழ்ச்சிக்குரியது.



திருகோணமலை மாவட்டசபைத் தலைவர்

## திரு. அ. தங்கத்துரை

தங்கத்துரை என்ற பெயரைக்கேட்டால் திருமலையின் சிறு குழந்தைகூட மனம் மகிழும். அத்தனை தங்கமானவர், திருகோணமலை மாவட்ட சபைத்தலைவர். வேகமாகவும் விரைவாகவும் பொதுப்பணியாற்றிவரும் திரு. தங்கத்துரை இம் மாவட்ட இளைஞர்களின் துருவநட்சத்திரமாக திகழ்ந்து வருகிறார்.

*1970—77* காலகட்டத்தில் மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியவர்; மிக அடக்கமாக பழகும் எளிமையான தலைவர்.

# பதில்கள்

## கரிகாலன்

பி. வடிவேல்,
கௌஸா எஸ்டேட், எல்ல.

**கே:** தமிழினத்தின் தலைவரைத் தூக்கிலிட வேண்டும் என்று யூ. என். பி. அமைச்சர் ஒருவர் பேசியிருக்கிறாரே?

**ப:** தம்பி வடிவேலா! பேசியதைப் பெரிதாகக் கூற வந்தாயே. உண்மையில் தூக்கில் போட்டால் அப்படியென்ன பிரளயமா உருவாகிவிடும்? 1977-ல் பட்டப்பகல் வேளையில் தமிழ் மண்ணிலே தமிழ்மக்கள் முன்னிலையிலேயே தமிழ்த்தலைவனை பகிரங்கமாக சிங்களப் பொலிஸ்காரன் தாக்கியபோது பூகம்பமா வெடித்தது? விட்டுத்தள்ளு தம்பி. மானம் கெட்ட பிழைப்பு.

**கே:** அமைச்சர்கள் நம் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத்தீர்மானம் பற்றி பேசிய போது, திரு. தொண்டமான் நடுநிலைமை வகித்தது எதைக் குறிக்கிறது?

**ப:** தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும் என்று கூறலாமா? முடியாதே. இரு முனைகளில் உதைக்கிறதே. ஒரு முனையில், அருமருந்தன்ன தமிழ் அமைச்சர்கள். இவர்களின் தசை ஆடவில்லையே. ஒன்றில் இவர்கள் தமிழர்கள் இல்லை அல்லது இவர்களுக்கு தசையே இல்லையோ? மறுமுனையில், உதவி அமைச்சர் ஷெல்டன் ரணராஜா என்ற சிங்களப் பிரமுகர். இவருக்கு தமிழ்த்தசை இல்லை. ஆயினும் ஆடியிருக்கிறதே: 'நம்ம' தொண்டமானைப் பாராட்டுவதென்றால், திரு. ரணராஜாவைத் தொட்டிலிலிட்டு தாலாட்ட வேண்டாமோ? ரணராஜா — பெருமகன் தொண்டமான் — ஆண்மகன்

மா. அதிபதி,
அச்சுவேலி வடக்கு

**கே:** இராமன் தமிழினத்தவன் என்றும் இராவணன் தான் தமது இனத்தவன் என்றும் ஆட்பெயர்களைக் கொண்டு ஆதாரம் காட்டியுள்ளாரே லொக்கு பண்டாரா?

**ப:** அப்புத்தளை எம். பி. லொக்குபண்டார சட்டக்கல்லூரியில் என்னுடன் படித்தவர். மிகவும் சிரமப்பட்டு சித்தியடைந்தவர். சட்டமே அவருக்கு இன்னும் சரியாகத் தெரியாது; பாவம், சரித்திரம் எப்படித் தெரியும்? லொக்கு பண்டார லொக்கு லொக்கு என்று இருமி உமிழ்வதெல்லாம் வெறும் எச்சில் தான். அது ஆதாரமாகிவிடாது.

**கே:** பிரிவினைத் தடைச் சட்டம் வந்தால், விடுதலைக் கோரிக்கை என்னாகும்?

**ப:** பொன்னாகும் — அதாவது, புடம் போட்ட பொன்.

**கே:** தொண்டமானுக்குள்ள இனவுணர்வு தேவநாயகம், இராசதுரை, ரங்கநாயகி ஆகியோருக்கு இல்லாமற் போனதேன்?

**ப:** முன்பொருமுறை நாடாளுமன்றத்தில் பேசும் போது தலைவர் அமிர்தலிங்கம் தேவநாயகத்தை தமிழினத்திற் பிறந்த ஒரு 'freak' என்று அழைத்தார். தேவநாயகம் மட்டுமா 'freak'?

வி. ஆர். தங்கவேல்,
அச்சுவேலி வடக்கு

**கே:** தனிநாடு கோருவதற்கு எந்த ஒரு தமிழனுக்கும் உரிமையில்லையென மொரார்ஜி தேசாய் கூறியிருப்பதாக தினபதியில் செய்தி வெளிவந்ததே, இது உண்மையா? உண்மையானால் அவருக்கு கொடுக்கும் தங்கள் பதிலடி என்ன?

**ப:** தமிழனின் உரிமைகளை குஜராத்தியர் வரையறுக்க முற்படுவது வேடிக்கைதான். உடல் ஆரோக்கியத்திற்கென சிறுநீர் பருகும் விகாரப் பிறவிதான் மொரார்ஜி. பாவம், மன ஆரோக்கியமற்றவர். இந்திய மக்களே மனிதரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை.

**கே:** கலைஞர் எங்கள் நாட்டில் பிறந்திருந்தால்.........?

**ப:** தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் செத்திருக்கும். எம். ஜி. ஆர் மயக்கம் பிழைத்திருக்கும்.

**கே:** கலைஞர் கருணாநிதி அவர்களையும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் நேருக்கு நேர் சந்திக்க விட்டால் தர்மிஷ்டத் தலைவரின் பாடு எப்படியிருக்கும்?

**ப:** "ஏய்யா! இந்த நாட்டைவிட ஐந்து மடங்கு பெரிய தமிழ்நாட்டை நான் பத்து அமைச்சர்களோடு சமாளிச்சேன். நீ தொண்ணூறு அமைச்சர்களையும் வைச்சுக்கிட்டு சமாளிக்க முடியாமே திண்டாடுறியே. அந்த அதிசயத்தை எனக்குச் சொல்லையா" என்று கலைஞர் கேட்பார்! தன்னடக்கத்துடன் தலைகுனிவார் தர்மிஷ்டர்.

மி. அருள்மொழிராஜா,
நிலாவெளி-3

**கே:** அண்ணா கரிகாலரே! நாட்டுப் பிரிவினை கோருவதைத் தடைசெய்யப் பயங்கரத் தடைச்சட்டம் வரப் போகிறதாமே?

**ப:** பயங்கரச்சட்டம் வராமலே இங்கு பயங்கர ஆட்சி தானே நடந்து கொண்டிருக்கி

றது. தமிழனைப் பொறுத்த வரை பயங்கரம் அவனுக்கு பழகி விட்டது.

கே: அந்தத் தடைச்சட்டமே எமது வெற்றிக்கு பலைபலமாக அமையுமல்லவா?

ப: த. வி. கூட்டணி போன்ற பகிரங்க அரசியல் இயக்கங்களை தடைச்சட்டத்தின் மூலம் இரகசிய இயக்கங்களாக மாற்றுவது அரசுக்கே நட்டம். முட்டாள்கள்.

கே: சிறீலங்காவின் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தேவநாயகத்தின் தேவையில்லாத 'குரைப்புக்கள்' எதைக் காட்டுகின்றன?

ப: குரைக்கிறது கடியாது என்பதை. எம்மை நோக்கி இவ்வளவு குரைப்புக்கும் அம்பாறை—மட்டகளப்பு மாவட்டங்களில் நடந்து முடிந்த வெறியாட்டங்களின் போது அவர்களை ஒரு முறையாவது கடித்ததா? அமைச்சு அதிகாரம், ஆலவட்டம் இவை இருந்தென்ன?

**கனக. பிரதீபன்,**
கொக்குவில் மேற்கு, கேணியடி

கே: எதிர்க்கட்சித் தலைவர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது அரசாங்க அமைச்சர்கள் பேசிய பொறுப்பற்ற பேச்சுக்களைப் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

ப: அவர்கள் வைத்த கொள்ளிதான் இன்று இனக் கலவரமாக நாடெங்கும் கொழுந்து விட்டு எரிகிறதே. தமிழ் மக்களின் கூக்குரல் மீண்டும் கேட்கிறதே. கொள்ளி வைத்தவர்கள் அமைச்சர்கள். கொள்ளி கொடுத்தவன் யார்?

கே: அமைச்சர் தேவநாயகம் கிழக்கு மாகாண மக்கள் தமிழ் ஈழம் கேட்கவில்லை என்று கூறுகிறாரே. மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் முடிவுகளை அவர் கவனிக்கவில்லையா?

ப: கிழக்கு மாகாண மக்கள் தமிழ் ஈழம் கோருவது (தமக்குக்) கேட்கவில்லை என்று கூறியிருப்பார். அடப்பாவமே, இந்த நல்ல மனிதருக்கு இந்த இளம் வயதில் காது இப்படியாகியிருக்க வேண்டாம்.

கே: தமிழர் மீது நடாத்தப்படும் ஒவ்வொரு தாக்குதலும் அவர்களைத் தட்டி எழுப்புகின்றதா? அல்லது தளர்வடையச் செய்கின்றதா?

ப: குட்டக் குட்டக் குனிந்து கொண்டிருக்கிறாயே மட்டி. உனக்குச் சூடு சொரணையே கிடையாதா என்று கேட்கிறது.

**மண்டைதீவு கலைச்செல்வி**
8ம் வட்டாரம்.

கே: தங்களைத் தாங்களே புகழ்ந்து தள்ளும் கலைஞர்களைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: பிறருக்கு சிரமம்தர விரும்பாதவர்கள்.

கே: ஒருவர் சிறந்த எழுத்தாளர் ஆவதற்கு கல்லூரிப் படிப்பு அவசியமா?

ப: அவசியமல்ல—வசியம்.

**அ. தயாபரி**
கொக்குவில் மேற்கு.

கே: ஈழத்தமிழ் மக்கள் ஒளியின்றி இருட்டில் வாழ்கிறோம். எப்போ எங்களுக்கு விடிவு கிடைக்கும்?

ப: 'சுவிட்சை' அமுக்கியதும் சூரியன் உதமாகிவிடாது அம்மணி.

கே: தர்மிஷ்ட ஆட்சியாளரின் பாதுகாப்புப் படையினர் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: படை-ஈனர்!

கே: தமிழ்மக்கள் மீது மிகவும் கேவலமான முறையில் பாரபட்சம் காட்டும் இ. ஓ கூட்டுத்தாபனத்தைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

'ப: இ. ஓ.' என்றால் என்ன பொருளம்மா? இலையான் ஓட்டும் கூட்டுத்தாபனமா? அதனை பே. ஓ. கூட்டுத்தாபனமாக விரிவுபடுத்தலாம். (பே. ஓ. — பேய் ஓட்டும்)

**செல்வி. விஜி—சபா, மல்லாகம்**

கே: ஈழம் என்பது சிங்கள இலங்கை. யாழ்ப்பாணத்தை சிங்கள மன்னர்களே ஆண்டார்கள் என்று சுனில் கூறுகிறார். அப்படியானால் தமிழர்களும் முஸ்லிம்களும்.........?

ப: சுனிலின் வாதம் உண்மையென்றால், தென்னிலங்கையை திராவிட மன்னர்கள் ஆண்டிருக்கிறார்களே. நாம் அங்கு போவோம், அவர்கள் இங்கு வரட்டும். பரஸ்பரம் பரிமாறிக் கொள்வோம். எம் உடன்பிறப்புகளுக்காக இதைக் கூடவா செய்யமாட்டோம்.

கே: சிங்கள இராணுவம் தென்னிந்தியா மீது படையெடுத்து தமிழர்களை விரட்டியடித்தது என்கிறார் லொக்கு பண்டார. அப்படியாயின்......?

ப: இந்தியாமீது படையெடுத்த மாவீரன் அலெக்சாந்தராலும் சக்கரவர்த்தி அக்பராலும், ஔரங்க சேப்பாலும் சாதிக்க முடியாததை தன் பாட்டன் சாதித்தான் என்கிறார் சொப்பன சுந்தரன் பெரிய பண்டாரம். இருபதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தமிழ் ஈழத்தின்மீது அடிக்கடி படையெடுத்து நிராயுதபாணிகளான அப்பாவி மக்களை கொன்றொழித்ததைத் தவிர வேறு எந்த நாட்டின்மீதும் சிங்கள இராணுவம் படையெடுத்ததாக—சரித்திரம்கூட வேண்டாம்—வெறும் சங்கதியே கிடையாதே. அப்படியாயின்......பண்டாரம் வேறு வேலையில்லாமல் பகற்பொழுதிலும் படுத்துறங்குகிறார் என்று பொருள்.

கே: உடுராவண, யட்டராவண என்னும் பெயர்களால் தம் இனம் இராவணனது பரம்

பரை என்று லொக்கு பண்டார கூறுகிறாரே? மயக்கமா? மருட்சியா?

ப: பரம்பரைப் பட்டியலை இன்னும் சற்று நீட்டி வாசிக்கலாமே. ஆனந்த டீ அல்விஸ் ஆனந்த குமாரசாமியின் பரம்பரை காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்தனும் ஆனந்த திசநாயக்காவின் பரம்பரை லொக்கு பண்டார பண்டார வன்னியன் பரம்பரை........... போதுமா? இது மருட்சியல்ல, கற்பனைப் புரட்சி!

இ. இரத்தினகுமார்,
சிவன்கோவிலடி,
வட்டுக்கோட்டை.

கே: 'இலங்கையில் தமிழர்கள் தனிநாடுகோருவது சரியா? என்று ஒருவர் கேட்ட கேள்விக்கு, 'ஏன் அங்கு கல்கண்டு நன்றாக விற்பனையாவது உமக்கு பிடிக்கவில்லையா, என்று கோழைத்தனமாக பதிலளித்திருக்கிறார் லேனா தமிழ்வாணன் இன்னொரு கேள்விக்கு, 'அங்கே தமிழர்கள் இந்தப் பாடுபட இவருக்கு எப்படித்தான் இப்படிச் சிரித்துக்கொண்டு போஸ் கொடுக்க மனம் வருகிறதோ' என்று தலைவர் அமிரைச் சாடியிருக்கிறார். ஆனால், தான், தனது பத்திரிகையில் எமக்கு ஆறுதலோ துக்கமோ தெரிவிக்கவில்லை. ஆனால், அட்டையில் துணிவே துணை என்று போட்டுக்கொண்டு விற்பனை செய்கிறார். சற்று விளக்கமாக பதில் கூறுங்கள்.

ப: அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது. சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு, நாம் தனிச் சிங்கள சட்டத்தை நிராகரித்து போர்க்கொடியுடன் நின்ற வேளையில் இவரது அப்பன் இராமநாதன் (தமிழ்வாணன்) இலங்கை வந்திருந்தார். வந்தவர் தன் வேலையைப் பார்த்துக்கொண்டு போவது தானே. எமது உணர்ச்சிகளையும் வேட்கையையும் புரிந்துகொள்ளாத இந்த மனிதர், ''தமிழர் கட்டாயம் சிங்களம் படிக்க வேண்டும் தேசிய ஒற்றுமைக்கு இது அவசியம்'' என்று ஓர் அணுகுண்டை தம் திருவாய்வழியே போட்டருளினார். சிங்கள,— ஆங்கிலத் தினசரிகள் அந்த வார்த்தைகளை குதூகலத்துடன் வெளியிட்டன. ஈழத்தமிழர்கள் தலைகுனிந்து நின்றார்கள். நண்பர்கள் பலர் கூடி கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் தமிழ்வாணன் பேச்சை கண்டித்து ஒரு பகிரங்கக் கூட்டத்தை நடாத்தினார்கள். தப்பினேன் பிழைத்தேன் என்று தமிழ்வாணன் இலங்கையைவிட்டுத் தலைதெறிக்க ஓடி மறைந்தார். அந்த அப்பனின் பிள்ளைதான் லேனா. சந்தேகமேயில்லை. திருமதி தமிழ்வாணன் ஒருபத்தினி.

கே: 'உதயசூரியன்' ஏன் வெளிவருவதில்லை?

ப: இவ்வாண்டு ஆனி மாதம் யாழ்ப்பாணத்தில் பொலிசார் மூட்டிய வேள்வித் தீயில் த. வி. கூட்டணித்தலைமை அலுவலகம் வெந்து சாம்பராயிற்று. அத்துடன் 'உதயசூரியன்' இதழ் அச்சக உபகரணங்களும் நாசமாயின. மீண்டும் அந்த இதழை வெளியிடும்முயற்சிகள் நடப்பதாக அறிகிறேன். மகிழ்ச்சி. இன்னொன்று, உதயசூரியன் (22-5-81) இதழில் காவலூர் நா. உ. பண்டிதர் கா. பொ. அவர்கள் 'கதிரவன்' என்ற பெயரில் என்னைக் குறித்து படுகேவலமான முறையில் எழுதியிருந்தார். பண்டிதரின் சொந்தப் பத்திரிகையில் அல்ல - கூட்டணியின் அதிகார பூர்வமான ஏட்டில் என்னைக் குறித்து ஏகத்தாளமாக எழுதிய முறைமைபற்றி என்னை நன்றாகத் தெரிந்துவைத்திருக்கும் கூட்டணித் தலைமை சற்றேனும் சலனப் படாதது குறித்து நான் வியப்பும் வேதனையும் அடைந்தேன். எமது இனத்தை எதிர் நோக்கும் நெருக்கடிகள் தணியட்டும். உதயசூரியனும் வெளிவரட்டும் பின்னர் மனம்விட்டு எழுதலாம் என்றிருக்கிறேன்.

யாழ்நாதன், நிலாவெளி.

கே: நடந்து முடிந்த நம்பிக்கையில்லாத் தீர்மானவிவாதத்தின் போது அண்ணன் அமிர்தலிங்கத்திற்கு விளக்கம் அளிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்காத பாராளுமன்றச் சபாநாயகரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: சபைக்கு ஏற்ற நாயகர்.

கே: இன்னும் உறக்கத்திலிருக்கும் சில தமிழர்களை எப்படி எழுப்பலாம்?

ப: அவர்கள் உறங்குபவர்களல்ல உயிரற்றவர்கள். பிணங்களை விட்டுவிட்டு பிரக்ஞை உள்ளவர்களைக் கவனியுங்கள்.

கே: அமைச்சர் இராசதுரை. கட்டப்போகும் கோபுரம் (சஞ்சிகை) பற்றி........?

ப: 'மனக்கோட்டை' என்ற சொற்றொடர் இனிமேல் 'மனக்கோபுரம்' ஆகலாம்.

அ. பாஸ்கரன், காலி வீதி,
கொழும்பு - 4

கே: அமைச்சர் இராசதுரையை எங்கே காணோம்?

ப: சிங்கள வெறியினால் இங்கு இந்துக்கள் செத்துக்கொண்டிருக்கிறார்கள். இராசதுரையோ இந்துசமய மாநாட்டிற்கு ஆள்சேர்க்க இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கிறார். நல்ல வேடிக்கை!

கே: இந்து மாநாட்டிற்கென கியூ வரிசையில் நின்று வாரிக் கொடுங்கள் என்று அமைச்சர் இராசதுரை வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே?

ப: பகிரங்கமாகப் பிறரிடம் பணம் கேட்டுப் பழக்கமில்லாதவர், இம்முறை கேட்கிறார். ஏதோ பார்த்துக் கொடுங்கள்.

பொ. இரவீந்திரன்,
திருகோணமலை

கே: தமிழில் நிருவாகம் நடத்துகின்றோம் என விளம்பரப்படுத்தும் திருகோணமலை நகராட்சி மன்றம் புதிய பொது நூலகத் திறப்புவிழா அழைப்பிதழை ஆங்கிலத்தில் மட்டும் அச்சடித்தது ஏன்?

ப: அதுதானே ...... ஏன்? என்னது, நான் உங்களிடம் கேட்க வேண்டிய கேள்வியை நீங்கள் என்னிடமே கேட்கிறீர்களா?

# “தமிழ்முனிவர் — தனிநாயகம்”

அனலை — ஆறு. இராசேந்திரம்

[தமிழ்ப்பேரறிஞர் தவத்திரு தனிநாயக அடிகளாரின் பிறந்த தினம் 2. 8. 81 ஆகும். அவரின் அமரத்துவ தினம் 1.9.80 இந் நினைவாக இக்கவிதை பிரசுரமாகிறது.]

தனிநா யகமெனும் தமிழ்முனி வன்புகழ்
சாற்றவும் ஒல்லு மாமோ?
தமிழ்ப்பணி தவப்பணி என்றுமே கொண்டவன்
தன்மைதான் சொல்ல லாமோ?
இனிதான பெண்பொருள் பொன்முதல் ஆசைகள்
இறைபணி செய்திடற்காய்
இப்புவி துறந்துமே நற்றமிழ் நங்கையின்
இன்எழில் துறந்திடாதோன்
தூனைநன்கு தமிழ்செய இறையவன் படைத்ததாய்
சொல்லியே தமிழ் வளர்த்தோன்
தரணியிற் றன்னுயிர் ஊனெலாம் தமிழ் என
வாழ்ந்துமே கதை முடித்தோன்.
தனியொரு மனிதனாய் நனிபணி செய்தவன்
தமிழால் உயர்ந்துவிட்டான்.
தனிநாயக மெனும் தமிழ்முனி தொண்டினால்
தமிழாள் உயர்ந்துவிட்டாள்.

பன்மொழிப் புலமையின் பான்மையாற் பாரெலாம்
பைந்தமிழ்த் தூது சென்றான்
பத்திக்கரும் மொழி முத்துத்தமிழ் எனப்
பண்புற நாட்டி வந்தான்.
இந்நிலத் திணையிலா திருந்தழிந்திட்டநம்
இசைமிகு பண் பாட்டினை
இடைவிடா தாய்ந்துமே ஆங்கில மொழியினில்
இதழுமே நடத்தி நின்றோன்
மன்புவி வாழ்ந்திடும் மற்றைய மொழியினர்
மலர்த்தமிழ் அழகு துய்க்க
மாபெரும் மன்றமே அமைத்துத் தமிழாய்வு
மாநாடு பல கண்டனன்
அன்னையாம் தமிழ்மகள் தன்பணி செய்தவன்
அகிலத்தை நீத்துவிட்டான்
அன்னவன் பெரும்பணி எண்ணியே அவனடி
அஞ்சலிக் கொண்டு சேர்ப்போம்.

ஆயிரம் ஆண்டுகள் அகலினும் அவன்பணி
அவனியில் நிலைத் திருக்கும்
அருந்தமிழ் மொழிபுவி வாழ்ந்திடும் நாளெலாம்
அன்னவன் பெயர் சிறக்கும்
தாயெனும் தமிழ் மகள் தொண்டரின் வரிசையில்
தனியிடம் பெற்று......... அந்த
தாமோதரன் முதல் ஞானப் பிரகாசரின்
தரத்தினிற் சேர்ந்திருக்கும்
நோய்கண்டு பாய்கொண்டு மாய்கின்ற போதிலும்
தமிழுண்டு என்று நின்றோன்
நொடியெலாம் தமிழ் தமிழ் என்றிங்கு நூறுதரம்
கூவியோன் தனிநாயகம்
கோயிலிற் கும்பிடும் தெய்வமாய் அவனுக்கு
நெஞ்சிடை நின்று வாழும்
கோபுரம் போலொளி சிந்தியே தமிழ்மொழி
கோடியாண் டிங்கு ஆளும்.

* * ~~~~~~~~~~~~~~ * *

## தமிழ் நாயகம்

தமிழ்த் துறவி வண. தனிநாயக அடிகளார் அமரத்துவம் எய்திய நாள் 1-9-1980. எதிர்வரும் 1-9-1981 ல் தமிழ் கூறும் நல் லுலகு இந்தத் தலைமகனை பொருத்தமான முறையில் பரந்த அடிப்படையில் நினைவுகூர வேண்டும். என்ற வேட்கையால் இந்த இதழில் அடிகள் பற்றிய சிந்தனைகளைத் தூவுகிறோம்.

## மாற்று இதயச் சிகிச்சை:-

இதயம் பழுதானவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து மாற்று இதயம் பொருத்துகின்றார்கள் அல்லவா? இம்மாதிரி கடந்த தலைமுறையில் 338 பேர் மாற்று இதயம் பெற்றனர். அதில் 77 பேர் இன்றும் உயிருடன் இருக்கின்றனர். அதிக அளவு உயிர் வாழ்ந்த காலம் 8. 7 ஆண்டுகள் ஆகும்.

302 பேர் மாற்றுக் கணையம் ( LIVER ) பெற்று அதில் 47 பேர் உயிருடன் இருக்கின்றனர். அதிக அளவு உயிர்வாழ்ந்த காலம்7 ஆண்டுகள் ஆகும்.

தகவல்; செல்வி K. அன்னக்கிளி,
அராலியக்க.

## அநீதியே நீ கேள் ?

— தமிழன்பன் —

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழு
ஆகஸ்டில் நடந்த அட்டூழியங்களுக்கு
அதி உத்தமர் அளித்த சமாதானம்

சன்சோனி கமிஷன்'

எரிந்த கடைகள் சரிந்த சிலைகள்
மடிந்த உயிர்கள் வடித்த கண்ணீர்
இடிந்த கோயில்கள் இழந்த கற்புகள்
இத்தனைக்கும் அரசு அளித்த ஈடு

வெறும் கமிஷன்கள் மட்டுமே !

அட்டூழியங்கள் புரிந்த
அரசபடை வீரர்கள்
ஐ ஆர்சி காவலர்கள்
ஆகியோருக்கு அளித்த பரிசு

பதவி உயர்ச்சி, பதக்கம் வேறு

பௌத்த தர்மமே, அதி உத்தமரே
இன ஒற்றுமை பேசுகிற எத்தர்களே
இதயத்தை இங்கே விட்டுச் செல்கிறோம்
என்கின்ற இதயமற்றவர்களே

இதுதானா உங்கள் நீதி?

எழுபத்தேழின் இரத்தக் கறை
மறையுமுன்னர்
எண்பத்தொன்றில் இன்னொரு
ரத்தக் கறை,
இதற்கும் ஒரு விசாரணைக் கமிஷனும்,
அநீதியே நீ கேள்,
அதர்மம் நிலைத்ததில்லை
அஹிம்சை தோற்றதில்லை
அநீதி வென்றதில்லை.



கே. ஆர். டேவிட்

# ஒரு பிரமுகரின் வருகைக்காக

எனது உடலோடு ஒட்டியிருக்கும் நகரப்புற பூச்சுவர்ணத்தை நீக்கிவிட்டுப் பார்த்தால்......... பார்ப்பவர்கள் நிச்சயமாக அருவருப்படையத்தான் செய்வார்கள்............... ஏனென்றால், நான் பிறந்து இருபத்தேழுவயதுவரை கிராமப்புறத்துச் சகதியிலேயே வளர்ந்தவன்............... அந்த வடுக்கள் எனது உடலில் இல்லாமல் போகுமா ?.................. ..!

ஆறு வருடங்களுக்கு முன்பு இலங்கையில் நடந்த தேர்தலின் போது எனது தகப்பனார் தெரிந்தோ, தெரியாமலோ..... ஆதரவு காட்டிய வேட்பாளர் வென்று............ அந்தச் செல்வாக்கில் நகரசபைக் காரியாலயத்தில் ஒரு வேலை கிடைத்தது

அதன்பின்பு...............பின்பென்ன......... நகரப்புறத்தில் பெரும் சீதனத்தோடு திருமணம்......... நகர வாழ்க்கை....... திருமணத்தோடு எனது வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றம்...... நான் போலி வாழ்க்கையைக் கற்றுக் கொண்டுவிட்டேன்! ....

......ஆனால் எனது உள்ளம்?.....!

முடிந்து போன அந்தக் கிராமப்புற சகதி வாழ்க்கை... அந்த அனுபவங்கள்.........மரணிக்கவில்லை......... எனது பார்வைகள் அந்த அனுபவத் தளத்தில் பட்டுத் தெறிக்கின்றன.....

......... அதனால்தான் இப்போதும் அவர்களைப் பார்த்து பரிதாபப்படுகின்றேன்.........

எனது அனுதாபத்திற்குரியவர்கள்.. .........
வேறு யாருமல்ல............
இதே கிராமத்து மக்கள்....
ஒரு குடம் தண்ணீர்.

அதற்காகத்தான் அவர்கள் காத்து நிற்கின்றனர்............

நான் வேலை செய்யும் நகரசபை நிர்வாகத்திற்கு உட்பட்ட கிராமம் என்பதைவிட, இக் கிராமத்துக்கும் எனக்கும் வேறெந்த உறவும் இல்லை. உத்தியோக தோரணையில் வந்து நிற்கிறேன்.........!

மூன்று தண்ணீர் லொறிகள்...... அவற்றிற்குப் பொறுப்பாக வந்துள்ளேன்.

தண்ணீருக்காகக் காத்து நிற்கும் அந்தக் கூட்டத் தொடர் நிமிடத்திற்கு நிமிடம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

இக் கிராமத்தில் தண்ணீர்
பஞ்சம்!...........

'பஞ்சம்'...... கொடியது.
அதிலும் தண்ணீர் பஞ்சம்!

குறிப்பிட்ட ஒரு காலத்தில் இப்பகுதியிலுள்ள கிணறுகளில் தண்ணீர் முற்றாக வற்றிவிடும். அப்படியான காலங்களில் நகரசபை, தண்ணீர் விநியோகம் செய்யும்.

ஒரு குடும்பத்திற்கு ஒரு குடம் குடிநீர் வழங்கப் படும். ஏனைய தண்ணீர்த் தேவைகள், இரண்டொரு குளங்களில்...... எருமை மாடுகள் வந்து போன சுவடுகளில்......... மனித சுவடுகள் படியும்...........

கடந்த மூன்று தினங்களாக இக் கிராமத்துக்கு தண்ணீர் வழங்கப்படவில்லை!

மிகவும் கொடுமையான—உண்மையான இந்தச் செய்தியை இப்போதுதான் நான் கேள்விப்பட்டேன்........... ஒரு நாளைக்கு ஒரு குடம் தண்ணீர்... அதுவும் மூன்று நாட்கள் வழங்கப் படவில்லை யென்றால்.........

உடனே நீர் வழங்கப்பட வேண்டுமென்று எனது மனம் அவதிப் படுகின்றது...... ஆனால் அதற்குரிய அனுமதி...... அந்த அதிகாரம் எனக்கில்லை!

"சாமி வஞ்சித்தாலும், பூமி வஞ்சிப்பதில்லை" என்று யாரோ ஒரு கவிஞன் பாடிய பாடல் இன்றும் நித்தியம் பெற்று விளங்குகின்றது......... ஆனால் அந்தப் பூமி........ இக் கிராமத்து மக்களை வஞ்சித்து விட்டது!

வஞ்சித்தபூமியில் ............. வஞ்சிக்கப்பட்ட இந்த மனிதப் புழுக்கள்...... நிற்கின்றனர்......

இதுவரை ஒரு தண்ணீர் லொறியை மட்டும் கண்டவர்கள் இன்று மூன்று தண்ணீர் லொறிகளையும் கண்டு ......... நல்ல தண்ணீர் குடிக்கின்ற ஆசையில்.........வாயில் சுரக்கின்ற உமிழ்நீரால் சிறுகச் சிறுக வயிற்றை நிரப்பிக் கொண்டு...........

சபிக்கப்பட்டவர்கள்!......?
ஒரு குடம் தண்ணீர்—
மூன்று நாட்கள் இப்பகுதிக்

குத் தண்ணீர் வழங்கப்படவில்லை ..........அதற்கான காரணத்தை விசாரிக்கின்றேன்.

இப்போது இங்கு ஒரு அரசியல் பிரமுகர் வர இருக்கின்றார். அவர் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பே இம்மாவட்டத்திற்கு வந்து விட்டார். அவரை வரவேற்பதில் நகரசபை எடுத்துக் கொண்ட முயற்சிகளினால்........தண்ணீர் விநியோகம் தடைப்பட்டு விட்டது.

தனி ஒருவனின் வருகை.... ஒரு கிராமத்து மக்களின் தண்ணீர் வசதி......கண்ணீர்! . ......

அந்தப் பிரமுகரே இப்போது இந்தக் கிராமத்துக்கு விஜயம் செய்யப் போகின்றார்

அவரை வரவேற்கத்தான் நாமெல்லாம் இங்கு வந்து நிற்கின்றோம்.............அரசாங்கக் கட்டளை!...........இதில் நமது சொந்தக் கருத்துக்கோ—கொள்கைகளுக்கோ இடமில்லை .. ......

மாலை போடத்தான் வேண்டும்!

கடந்த மூன்று நாட்களாக நகரம் விழாக்கோலம் கொண்டிருக்கின்றது.

இப்போது............
இக்கிராமம்விழாக்கோலம் பூண்டிருக்கிறது!.........

வரண்ட வயலில்........... செயற்கைப் பயிர்கள் நாட்டப் பட்டிருக்கும்...........தூரத்துப் பச்சை!......அதன் செழுமை!...

நேற்றுப்பிற்பகல் தொடக்கம் இங்குள்ள அரசாங்கக் கந்தோர் ஊழியர்களின் பகீரதப் பிரயத்தனத்தினால்....வறுமைக்கும் செழுமைக்கும் ஒரு முடிச்சுப் போடப்பட்டிருக்கின்றது.

“......அம்மா இண்டைக்கு மூன்று தண்ணீர் லொறி வந்திருக்கு......நிறையத் தண்ணீர் குடிக்கலாம்..........” தண்ணீருக்காகக் காத்து நின்ற ஒரு சின்னஞ் சிறிசு தாயிடம் கேட்பது எனக்குக் கேட்கின்றது...

## விரக்தி

பத்துமாதம் சுமந்து
பெத்தகடன் தீர
பித்தனாக வேனும் வாழ்ந்து
முத்து முத்தாய்ப் பணம் சேகரித்து
சத்துடன் வாழ வைத்து விட்டு
செத்துமடிந்து
முத்தி அடைவதே
இனி என் பணி.

—ரத்னா முருகுப்பிள்ளை

பழுக்கக் காச்சிய இரும்புக் கூர்........எனது செவிப்பறையைக் குத்தி........

தலையைத் தாழ்த்தி நிலத்தைப் பார்க்கிறேன்.

“... . நீரை வழங்குகின்ற இயல்பான உனது தருமத்தை இந்தக் கிராமத்தில் மட்டும் ஏன் நிறுத்திவிட்டாய்..........” நானே எனக்குள் கேட்டுக் கொள்கிறேன்.

மண்ணும் மனிதனும்.......
தண்ணீரும் கண்ணீரும்.....

இப்பகுதியிலுள்ள சில‘அதி உத்தமர்கள்’ அந்தப் பிரமுகரை அழைத்துள்ளனர்......... பத்து நிமிடங்கள் மட்டும் அந்தப் பிரமுகர் இந்தக் கிராமத்தில் நிற்பார்.........

....... இதற்காக அரசாங்கம் பத்தாயிரம் ரூபா ஒதுக்கியுள்ளது......ஒரு நிமிடத்திற்கு ஒரு ஆயிரம்...........!

.. . .... பிரமுகர் காரில் வருவார்...............காரிலிருந்து இறங்குவார்................அவரை அழைத்த ‘அதி உத்தமர்களும்’ உறவினர்களும் வரிசையாக மாலை போடுவார்கள்......அனைவரையும் பார்த்து......தலைக்கு மேலாய் இருகரம் கூப்பி அந்தப் பிரமுகர் சிரிப்பார்......... பிரமுகரைப் பார்த்து அனைவரும் சிரிப்பார்கள்.........புகைப் படங்கள்.........

பத்து நிமிடம் முடிந்துவிடும்.........

அந்தப் பிரமுகர் காரில் ஏறிப் போய்விடுவார்............

அவ்வளவுதான்!
அந்தப்பிரமுகர் யார்?.....!

‘தேர்தல் வந்தால் புள்ளடி போடுவது’ அரசியலைப் பொறுத்து இவ்வளவுதான் இக்கிராம மக்களுக்குத் தெரியும்!

“அம்மா.........கால் உளையுது ...........இருப்பமா..........” தொடர்ந்து நின்ற கால்வலியால் ஒரு பச்சைப்பாலன் தாயிடம் கேட்கின்றது.

“..............அம்மா தண்ணி விடாய்க்கிறது....... ......”இன்னொன்று

“......ஐயா நாக்கு வரண்டு போச்சு.....”இன்றோநாளையோ சாம்பலாகி மண்ணோடு சங்கமிக்கப் போகும் ஒரு கிழம்!

கண்ணீர்விடவே உடலில் தண்ணீர் இல்லாதவர்கள்......

‘மூன்று தண்ணீர் லொறிகளையும் பார்க்கின்றேன்.

‘தண்ணீர் குடிப்பமா......’ மனிதாபிமானம் வாய்திறக்கின்றது.

‘மேலிடத்து உத்தரவை என்னால் மீறமுடியுமா............. ஒரு நாள் மட்டும் உத்தரவை

## கெடுத்தாரே!

சுவிட்சலாந்து நாட்டின் பாராளுமன்றம் முன்பு ஒரு நாள் திடீர் என்று ஏராளமான புகைப்படக்காரர்கள் கூடிவிட்டார்கள். "ஏன் இங்கே கூடியிருக்கிறீர்கள்?" என்று அவர்களிடம் போலீசார் கேட்டார்கள். "பெண்கள் நிர்வாணமாகப் பாராளுமன்றம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக எங்களுக்கு தகவல் வந்து இருக்கிறது" என்று புகைப்படக்காரர்கள் கூறினார்கள். பிறகுதான் தெரிந்தது. அன்று ஏப்ரல் முதலாந் தேதி என்று!

—வாஷிங்டன் போஸ்ட்

மீறுவதால்............இவர்கள் து பிரச்சனை தீர்க்கப்படுமா.....? பிரச்சனையின் நுனியைப் பற்றிய நான் ஆணிவேர்வரை போய் மீளுகின்றேன்.......

சட்டத்தை மீறுகின்ற துணிவு எனக்கில்லை!

"......ஐயா வீட்டிலே........ தாயைத் தின்னிப் புள்ளை யொண்டு.......பால் கரைக்கத் தண்ணியில்லை......மூண்டுநாள்.. ஒரு கோப்பைத் தண்ணி தந்திட்டு நில்லுங்கோ................" தாயற்ற ஒரு குழந்தைக்காக யாசிக்கும் இன்னொரு தாய்..... எனது கண்களால் இரத்தம் வழிகின்றது!

தண்ணீர் லொறியை நோக்கி முன்னேற என் கால்கள் துடிக்கின்றன......

சட்டம்.........

எனது கால்கள் விலங்கிடப்படுகின்றன!

வானத்தைப் பிளப்பது போல இக்கிராமத்து எல்லையிலிருக்கும் தேவாலய மணி ஒலிக்கின்றது.

மத்தியானம் பன்னிரண்டு மணி'.

இன்னும் அரைமணி நேரத்தில் அந்தப் பிரமுகர் வந்து விடுவார்.

'அதி உத்தமர்களும்'........ அரசாங்க அதிகாரிகளும் உசாராகுகின்றனர்

......தூரத்தே ஒன்றன்பின் ஒன்றாய் இரண்டு கார்கள் வருகின்றன................

யானை வரும் பின்னே...... மணியோசை வரும் முன்னே....

பாலர் வகுப்பில் நான் படித்தது..........இப்பிரமுகரின் வருகையால்.........

காரில் வந்தவர்களும், இங்குள்ள 'அதி உத்தமர்களும்' இங்குள்ள நிர்வாகம் பற்றிக் கலந்துரையாடுகின்றனர்........

வந்தவர்களில் ஒருவர்.. ... பொலிஸ் அதிகாரி என்பது தெளிவாகத் தெரிகின்றது. அந்தப் பொலிஸ் அதிகாரி தண்ணீருக்காக வரிசையாக நிற்கும் அந்த மக்களைப் பார்க்கின்றான்... ...

"...இவர்கள் ஏன் நிற்கின்றார்கள் ....."

...தண்ணி வேணுமாம்..."

"......அதெல்லாம் இல்லையெண்டு சொல்லுங்கோ......"

"..சொல்லிப் போட்டம் ஆனால் அவை தங்களுக்குத் தண்ணி வேணுமாம்......"

"..........கொழும்பிலிருந்து வாற பெரிய மனிசனுக்கு எங்கடை குற்றங்குறைகளைக் காட்டக்கூடாது......நீங்களெல்லாம் போங்கோ.................." அந்தப் பொலிஸ் அதிகாரி கூறுகிறான்

"..... நீங்கள் தண்ணியைத் தந்தால் நாங்கள் போயிடுவம்........."

"........தண்ணி எங்கடை தேவைக்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கு........"

"...ஐயா மூண்டு நாளாய்த் தண்ணியில்லை......"

"... அதைப் பற்றி எனக்குத் தெரியாது......"

"......நாங்கள் போகமாட்டம்......"

சில நிமிடங்கள் மௌனமாக நின்று அந்த அதிகாரி தன்னோடு வந்த ஏனைய அதிகாரிகளோடு உரையாடுகின்றான்.

சில வினாடிகள்

அந்தப் பொலிஸ் அதிகாரி தன்னிடமிருந்த விசிலை எடுத்து ஊதுகிறான்

## உற்றதுணை பெண்

உலகம் உய்வதற்கான வழி தேடிப் போராடிய உத்தமர்களின் வரலாற்றை உற்று நோக்கின் ஒரு உண்மை புலப்படும். அத்தகைய தீரர்களின் உணர்ச்சிகளுக்கு உறுதுணையாக ஒவ்வொருவருக்காகவும் ஒவ்வொரு பெண் வாழ்ந்திருக்கின்றாள் என்பதே அவ்வுண்மை.

—அறிஞர் பெர்னாட்ஷா.

இலையுதிர் கால வேப்ப மரத்தடிச் சருகுகள் போல் நிறைந்து நின்ற பொலிசார் அந்த அதிகாரியைச் சூழ்ந்து கொள்கின்றனர்.

...... ஏதோ ஆங்கிலத்தில் கூறுகிறான்........

அந்நியரால் வகுக்கப்பட்ட சட்டம் என்பதாலோ—என்னவோ...... தனது கட்டளையை ஆங்கிலத்திலேயே கூறுகின்றான்.

பொலிசார்...... அந்த மக்களை நோக்கிப்பாய்கின்றனர்... அவ்வளவுதான்!

மண்குடங்கள் உடைந்து சிதறுகின்றன......... கோப்பைகள், வாளிகள் ..... ஏனைய பாத்திரங்கள் நிலத்தில் உருண்டு.... மிதிபடுகின்றன........... சிறுபிள்ளைகள், வயோதிபர்கள் மிதிபடுகின்றனர்........ தண்ணீருக்காகக் காத்து நின்றவர்களின்.........அவலக் குரல்......... கண்ணீர்........

கூட்டம் கலைக்கப் பட்டு... அமைதி நிலை நாட்டப்படுகின்றது.

“ நேரஞ்சரி......... ... தண்ணீரை ஊத்துங்கோ...... எனது மேலதிகாரி எனக்குக் கட்டளை பிறப்பிக்கின்றார்.

மூன்று தண்ணீர் லொறிகளும் பதினைந்தடி இடை வெளியில் ஒன்றன் பின் ஒன்றாய்...... ஆமை வேகத்தில் நகரத் தொடங்குகின்றன...........

லொறிகளின் பின் புறத்திலிருந்து மழைநீர் போல் தண்ணீர் வடிகின்றது........

வீதியிலுள்ள அழுக்குகள் கழுவப்பட்டு, வீதி குளிர்மையடைகின்றது... ...

வருகின்ற பிரமுகருக்கு வீதி வெக்கை படக்கூடாது!... ...?
“ றோட்டுக் கழுவவா தண்ணீர் கொண்டுவந்தனீங்கள் ” அங்கு நின்ற ஒருவன் என்னிடம் கேட்கின்றான்

“ ஓம்........... ”

“...... மூன்டு லொரி தண்ணியுமா............ ”

“ ...... ஓம் ......... ”

“ ...... வாறவர்...... நடந்தா... வருகிறார்......... ”

“ ...... இல்லை ...... காரிலைதான் வருவார் ......... ”

“...... அப்ப ஏன் றோட்டைக் கழுவுவான் ...... ...... ”

“ ...... வெக்கை தணிஞ்சு ...... துப்பரவாக இருக்குமெண்டதுக்காக ........... ”

“ ... காரிலை வாறவருக்கு இதெல்லாம் தெரியுமா...... ” அவன் விரக்தியோடும் வெறுப்போடும் என்னிடம் கேட்கின்றான்.

“ ...... ” நான் என்ன பதிலைக் கூறுவது? “ தண்ணியில்லாமல் ......... வரண்டுபோன எங்கடை வயித்து வெக்கை எப்பதான் மாறுமோ......... ” அவன் கூறுகிறான்.

“......... ” என்னால் பேசமுடியவில்லை.

**இம்மாத பரிசுக் கதை**

“ ...... ஐயா...... நீங்களும் ஒரு மனிசரா ............ எரியிற வயித்தை அடக்க நல்ல தண்ணி இல்லாமல் உப்புத் தண்ணியைக் குடிச்சு ...... வயிறு புண்ணாய்ப் போச்சு .... அந்த உப்புத் தண்ணியாலை றோட்டைக் கழுவி... ... நல்ல தண்ணியை எங்களுக்குத் தரக் கூடாதா...”

அவன் பேசுகிறான் —

நான் பேசவில்லை........

“ ஐயா...... ...... வயித்துக் கொதிப்புக்கு மட்டும் எரிகின்ற சக்தியிருந்தால் ........

## திருட்டுப் பெயர் கேட்ட அண்ணா!

கல்லூரியில் படித்த காலத்திலே அண்ணா சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்தார். தேர்வுகளில் அவர் எழுதிய விடைத்தாள்களைப் பார்த்து “எங்கே திருடி எழுதினாய்” என்று ஒரு பேராசிரியர் கேட்டாராம். அண்ணா சிரித்துக் கொண்டே “எங்கேயும் திருடவில்லை நானாகத்தான் எழுதினேன்” என்றாராம். எம். ஏ. இறுதித்தேர்வில் அண்ணா எழுதிய விடைத்தாள்கள் இன்றும் பல்கலைக் கழகதுதில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளனவாம்.

—கதிர் மாணிக்கம்

ஒவ்வொரு வயிறும் பத்தி எரிஞ்சு.........

ஒவ்வொரு வீடாய்பரவி... இந்தக் கிராமமே தீக்கிரையாகிப் போயிருக்கும்......

......சீ... மனச்சாட்சி இல்லாத மிருகங்கள்........ ” கூறியவன் காறி உமிழ்கின்றான்...... அவனால் துப்பப்பட்ட உமிழ்நீர் நிலத்தில் விழுந்து குமிழ் விட்டு வெடிக்கின்றது........

மனவேக்காட்டின் பிரதிபலிப்பா?...... ...

தூரத்தே —
அந்தப் பிரமுகரின் கார் வந்து கொண்டிருக்கின்றது.

( யாவும் கற்பனை)

# பிறை விளைவித்த பிணக்குகள்

எஸ்.பி. கிருஷ்ணன்

கவிதைத் துறையில் வல்லவராயினும்: சில துறைகளில் சில பாடல்களை எல்லோரும் பாடுதல் அருமையாகும். 'பிள்ளைத் தமிழ்' என்னும் நூல் பாடுவோருக்கு அதன் பத்துப் பருவங்களுள் ஒன்றான அம்புலிப் பருவத்தைப் பாடுவது அருமையாம். 'உலார்' என்னும் நூல் பாடுவோருக்கு பெதும்பை பருவத்தைப் பாடுவது கடினமாகும். இதனை ஔவையார்,

"காசினியில் பிள்ளைக் கவிக்'(கு) அம் புலி புலியாம்
பேசும் உலாவிற் பெதும்பை புலி..."

என்று பாடியுள்ளார்.

பாடல்களிலே பிறையையும் மதியையும் அதிகமாக அமைத்துப் பாடுவது கடினமாகும்.

ஔவையார் ஒட்டக் கூத்தரின் கொட்டத்தை அடக்க எண்ணினார். 'மூன்று பிறைகள் வர ஒரு பாடல் பாடும்' என்று கேட்டார்.

உடனே கூத்தர் பாடினார்.

பலரும் பாட்டில் பிறையைத் தேடினர். பாட்டின் இறுதியடியில்-

'பிள்ளை மதியிரண்டு எம்பேதை பெரிய மதியுமிழ்ந்தானே' என்னும் அடியில் இரண்டு மதியைக்கண்டனர். உடனே ஔவையார் 'ஓட்டா ஒரு மதி கெட்டாய்' என்று சுட்டிக் காட்டினார். கூத்தருக்கு தன் பாட்டில் ஒரு மதி குறைந்த குறை அப்போதுதான் தெரிந்தது. வெட்கித் தலை குனிந்தார்.

ஔவையார் உடனே மூன்று பிறைகள் வரும்படி பாடல் பாடி எல்லோரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார். அப்பாடல் இதோ—

**"பங்கப் பழனத் துழும் உழவர்**
**பலவின் கனியைப் பறித்த தென்று**
**சங்கிட் டெறியுங் குரங்கிளநீர்**
**தனைக் கொண் டெறியுந் தமிழ்நாடா**
**கொங்கைக் கமரா பதியளித்த**
**கோவே! ராச குலதிலகா!**
**வெங்கட் 'பிறை'க் குங்கரும் 'பிறை'க்கும்**
**மெலிந்தப் 'பிறை' க்கும் விழிவேலே"**

நாகை கல்விமான்களையும் கவிஞர்களையும் பெற்ற இடம். வசை பாடத் தொடங்கிய காளமேகத்தையே வாயடக்கச் செய்த ஊர்.

காளமேகம் அங்கு போயிருந்தபோது தெருவில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை 'சோறு எங்கே விக்கும்'? என்று கேட்டார். விற்கும் எனக்கேட்கவேண்டியதை விக்கும் என்று கேட்டதால் சிறுவர்கள் 'தொண்டைக் குழியில் விக்கும்' என்றனர். ஏளனமாக. காளமேகம் கோபமடைந்து அச்சிறுவர் மீது அறம் பாட எண்ணி ஒரு சுவரில்-

**"பாக்குத் தரித்து விளையாடும் பாலகர்க்கு"**

என்று ஓரடி எழுதினார். அதற்குமேல் பாட முடியாது போல் இருந்தது. உணவை முடித்து விட்டு வந்து பாடலாம் என்றெண்ணி நடந்தார். திரும்பிவந்து பார்த்தபோது பாடலின் இரண்டாம் அடி,

**"நாக்குத் தமிழ் உரைக்கும் நன்னுகை"**

என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தார். எதுகைமோனையோடு என் தவறையும் சுட்டாமல் சுட்டிவிட்டார்களே, இச்சிறுவர்கள்! என்று தன்னை நொந்துகொண்டு நடந்தார். காளமேகத்தையே கலங்க வைத்த நாகைப் பட்டினத்திற்கு இராமச்சந்திரர் ஒரு முறை போயிருந்தார்.

நாகையில் கோயில் கொண்டிருக்கும் காரோணரை வணங்கி கொடிமரத்தடியில் அமர்ந்து இளைப்பாறினார். கவிஞர் பக்கத்தில் மற்றிருவர் வந்து அமர்ந்தனர். மூவரும் பேசிக்கொண்டிருந்தனர். பேச்சின் போக்கில் இராமச்சந்திரர் ஒரு கவிஞர் என்று இருவரும் அறிந்து கொண்டனர். அவருள் ஒருவர்

"கவிஞரே! பாரதத்தைப் பாரதவிலாசம் என்றபெயரில் நாடகமாகப் பாடியிருப்பதாக கூறினீர்கள். அப்படியாயின் ஒரு பொருளைப் பற்றி 'பாடு' என்றால் உடனே உம்மால் பாட முடியுமா? என்றார்,

"முடியுமா என்று கேட்காதீர். இப்படிப் பாடும் என்று சொல்லும் பாடுகிறேன்" என்றார் கவிஞர்.

"ஒரு பாடலில் நான்கு பிறைகள் வரப் பாடுவீரா?"

"நான்கு போதுமா? எட்டுப் பிறைகள் வேண்டுமானாலும் அமைத்துப் பாடுகிறேன்"

"அப்படியா? எட்டுப்பிறைகள் அமைத்துப் பாடும் பார்க்கலாம்"

அப்பொழுது இவருடன் வந்த மற்றவர், "ஒட்டக்கூத்தரே ஔவையாரிடம் 'குட்டு' வாங்கினார். இவரையும் அந்நிலைக்கு ஆளாக்கப் போகிறீரா?" என்றார்.

"ஓய் உமது நண்பர் ஔவையின் அவதாரமா என்ன? நான் ஒட்டக்கூத்தரின் மறுபிறவியா என்ன? பாடல் என்றால் என்னவென்று உமக்குத் தெரியுமா?" என்று கேட்டார் இராமச்சந்திரர்.

இதைக் கேட்ட முதலாமவர் 'நமக்குள் வீண் வாதம் ஏன்? காரியத்திற்கு வருவோம். எட்டுப் பிறைகளையும் உம் பாடலில் சுட்டிக் காட்டும்" என்றார். கவிஞர் உடனே—

வம் 'பிறை' க்கும் 'கடம்' பிறைக்கும் பெரும்
'பிறை' க்கும்
நிகராகா வளர்ந்த வொன்றைக்
கொம் 'பிறை'க்குந் தாயைராங் கடல் நாகைக்
காரோணர் கொன்றை நல்கார்
அம் 'பிறை' க்கும் விழிப்பரவை யாயர்குழல்
கொல்லனுலை யனலிற் காய்ந்த
செம் 'பிறை' க்கும் வெண் 'பிறை' க்கும் கரும்
'பிறை' க்கும்
சுருக்கிதனித் தென்செய்வாளே'!

என்று பாடி முடித்துவிட்டு, "பாடலில் எட்டுப் பிறைகளும் எட்டிப்பார்க்கும். ஒன்று மணக்கும், ஒன்று சிந்தும், ஒன்று வளையும், ஒன்று எரிக்கும், ஒன்று உவக்கும், ஒன்று பிறையாகவே இருக்கும், எஞ்சிய இரண்டு இறைவனாக— தலைவனாக விளங்கும். காரோணர்தான் பாட்டுடைத் தலைவன். பாடல் நற்றாய் இரங்கல் துறையைச் சார்ந்தது" என்றார்.

"பாட்டிலிருக்கும் பிறைகளை வெட்டிப் பிரித்து விளக்கம் கூறும்" என்றார் இரண்டாமவர்.

வம்பிறைக்கும்: வம்பு+இறைக்கும். வம்பு என்றால் மணம். இறைக்கும் என்றால் வீசும் என்று பொருள்.

கடம்பிறைக்கும்: கடம்பு —இறைக்கும்: கடம்பு கடம்பப்பூ, இறைக்கும்—கடவுளுக்கும் —தலைவனுக்கும்.

ஒற்றைக் கொம்பிறைக்கும்: கொம்பு+இறைக்கும், கொம்பு — கோடு, மருப்பு தந்தம் எனப் பல பொருள் உண்டு. யானைத் தலையுடைய விநாயகன் தன் தந்தங்களில் ஒன்றை முறித்து எழுதினான். அதனால் ஒரு கொம்பே உடையவன். எனவே ஒற்றைக் கொம்புடைய விநாயகனுக்கும்.

அம்பிறைக்கும்: அம்பு+இறைக்கும். அம்பு —நீர். இறைக்கும்—சிந்தும் என்று பொருள்.

செம்பிறைக்கும்: செம்மை —பிறைக்கும். செம்மை—சிகப்பு பிறைக்கும்— நீருக்கும்— அதாவது செந்நீருக்கும் என்று பொருள்.

வெண்பிறைக்கும்: வெண்மை + பிறை; வெள்ளிய திங்களுக்கும் என்றாகும்.

கரும்பிறைக்கும்: கரும்பு + இறைக்கும்; கரும்பு வில்லுக்குத் தலைவனான மன்மதனுக்கு என்று பொருள்.

பகுப்புரை சொன்ன புலவர், இதற்கு மேலும் விளக்கம் கோரினால் உமக்கு யாப்பிலக்கண அரிச்சுவடி கூடத் தெரியாது என்று பொருள், என்று வேடிக்கையாகக் கூறிவிட்டுப் புறப்பட்டார்.

'கவிஞர் இராமச்சந்திரர் வீட்டுமொழி தெலுங்கு. புலமை பெற்ற மொழி தமிழ் என்பதை மனதிற் கொள்க.'

---

## நினைவு அலைகள்

செல்வி, ரஞ்சினி—இராசரத்தினம்

நெஞ்சத்தி லிடம் பெற்ற — நினைவுகளோ பல
அவற்றை
நஞ்சு என வெறுத்து — நாம் மறக்க முயன்றாலும்
நினைவுச் சுழலலைகள் — நீண்டு தொடர்ந்து வரும்
அனைவருக்கும் இது நியதி — அலைகடலிற் துரும்பு
நாம்;

---

# கவிச்சரங்கள்

## நியாயம்

என்பெயர் சோஷலிஸ்ட்
எனக்குத் தேவை
நாளு சமூகம்,
தேட்டக் கூட்டம்
வாழ அவர்கள்
வழியினைக் காட்டி
எளியோர், வலியோர்
பேதம் போக்கி
நாளில் நாளுறு
நா, வால்பொழியும்
ஆனால்,
என்னில் தங்கி
வாழும் மனிதன்
எனக்கும் கூலி
நர்லிலொன்று

—"ஈழக்குயில் இத்ரீஸ்"

## முதுமை

பள்ளங்களில் வீழ்ந்தும்,
பருவக் கரைகளைத்
தழுவியும் —
வேகமாய் ஓடும்
"இளமை" நதி
தணிந்து.........
வற்றிட.............
உறுதியாய்க்
குறுக்கிடும் அணை —

## ஆசை

உடல் குளத்தில்
பருவ சலனத்தில்
உருவாகி .......
மேற்கரை முகிழும்
நீர்க் குமுழிகள் —

—மா. இராஜலிங்கம்

## கண்ணீர்

இதயத் திடலில்
தேங்கிக்கூடிய
இருட்கூட்டம்
அனுதாபக்காற்று
அனலாகவீசிடவே
ஆறாய் பெருகி
வழிந்தோடும் மழைநீர்

—செல்வி தே. இராக்கினிதேவி
உடுவில்

## போராடுவேன்.

போர்ராடு வேன்— தினம்
போராடு வேன்.

போர்ராடி போரர்டி
போராடித்தோற்றாலும்
வேரோடு சாய்ந்திங்கு
வெறுங் கூடாய்ப் போனா
லும்

போராடு வேன்— தினம்
போரர்டுவேன்.

விழிக்கின்ற சில பொழு
தும்
வீணின்றி; இரவை
கழிக்கின்ற காலத்தும்
கனவோடு வாளேந்தி

போராடுவேன் — தினம்
போராடுவேன்.

ஊரோடும் ஒட்டாமல்
ஒரு கையின் ஓசையென
யாரோடும் கூடாமல்
யமனோடும் வாயாடி

போராடுவேன் — தினம்
போராடுவேன்.

— பி. சந்திரசேகரன் —
நாகவலை தெமோதர.

## அனுபவித் தறியவாம்!

குளிர்காலத்திலும்
குளிரூட்டிய அறையில்
பணம் படைத்தவன்
படுத்துறங்கினான்!
ஏனெனில் —
ஏழை குளிரினால்
எப்படி வருந்துவான்
என்பதைதானே
அனுபவித்தறியவாம்!

—முருகு

## வாக்காளர்

தேர்தல் வந்தது - நாம்
தேவைப் பட்டோம்
இந்நாட்டின் மன்ன
ரென்றும்
இரத்தத்தின் இரத்த
மென்றும்
ஏற்றப் பட்டோம்
போற்றப் பட்டோம்
பின்
தேர்தல் முடிந்ததும்
— அவர்கள்
தேவை முடிந்ததும்
நாட்டின் அபிவிருத்திக்கு
வேட்டாக மிளிரும்
பிரச்சினைக்குரிய சனத்
தொகை நாமாம்

ச. புஷ்பகுமார்
உடுத்துறை தெற்கு



# ஏற்றாத ஏணிகள்

**வன்னியூர் அன்ரனி மனோகரன்**

**வி**ளக்கு வெளிச்சம் மெதுவாக அசைந்தாடிக் கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் படித்துக் கொண்டிருந்தான் பாலன். காலை வேளைபடிப்புக்கு உகந்த நேரம்தான், ஆனால் பாலனின் மனம் படிப்பில் செல்வதாக தெரியவில்லை. பாடசாலையில் நடைபெறும் பரீட்சைக்கு பணம் செலுத்தும் கடைசி நாள் காலைக் கதிரவன் உதயமானவுடன் பிறக்கப் போகிறது. எப்படித் தான் பணத்தைக் கட்டப் போகிறேனோ என்று அவனின் மனம் ஏங்கி தவித்துக் கொண்டிருந்தது!

அவனுக்கு உறவினர்கள் என்று இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்றால் அது அவனின் தாயாராகத்தான் இருக்கும்! தாயாரை விட வேறு யாரிடம்தான் அவன் "பரீட்சைக்கு பணம் தாங்கோ?..." என்று கேட்பது? அவனின் தாயாரும் பணம் தரக்கூடிய நிலையிலா இருக்கிறாள்?......கடுமையான சுகவீனம் காரணமாக அவள் கடந்த இரண்டு நாட்களாக வேலைக்குப் போகவில்லை. அப்படியிருக்க அவளிடம் எப்படி பணம் இருக்க முடியும்? அன்றாடம் உழைத்து அடுப்பூதும் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் அல்லவா அவர்கள்?

மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு படிப்பில் கவனத்தை செலுத்த தொடங்கினான்.

"நியூட்டனின் முதலாவது விதி!......விதியை மனப்பாடம் செய்ய எத்தனிக்கிறான். அதற்குள் அவனின் தாயாரின் இருமல் சத்தம் கேட்கிறது.

"கொல்!......கொல்!........ கொல்......"

தாய் விழித்துக் கொண்டு விட்டாள் என்பதை உணர்ந்து கொண்டு, புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, விளக்கை கையில் எடுத்தபடி தாயாரின் படுக்கையை நோக்கி சென்றான்.

இருமலின் பிடிக்குள் 'சிக்கி' அவள் தடுமாறிக் கொண்டிருந்தாள். இருமல் அரக்கன் தன் இரும்புக் கைகளால் அவளை இறுக பற்றியிருந்தான் போலும்?...

படுக்கையில் அருகில் அமர்ந்து தாயாரின் வரண்டு போய் கிடந்த நெஞ்சுப் பகுதியை தடவிக் கொடுத்தான்.

"எப்படியம்மா ... இப்ப... காச்சல் இருக்கு?......" ஆதரவாக வினவுகிறான்.

"குறைஞ்சிட்டுது போலத் தான் கிடக்கு ........அது இண்டைக்கு மாறிப் போயிடும்,... நீ ஏன் இப்ப எழும்பி வந்தனி?...போய் படி!...சோதனை வருகுது எண்டல்லே சொன்னனி!..." முனகியபடி கூறினாள் அவள்.

பாலனுக்கு தனது தாயாரைப் பார்க்க பரிதாபமாக விருந்தது.

"தனது காச்சலிலும் விட எனது படிப்புத்தான் அவவுக்கு பெரிசாக கிடக்குது!..." மனதிற்குள் கூறிக் கொண்டான்.

"படுத்திரெனை!...... நான் உனக்கு தேத்தண்ணி வைச்சுத் தாறன்" என்று கூறிவிட்டு விளக்கை எடுத்துக் கொண்டு அடுப்படியை நோக்கி நடந்தான்.

"பாலா!...வேண்டாம்!..... விடிஞ்சா பிறகு நான் எழும்பி தேத்தண்ணி வைக்கிறன்!......

நீ போய்ப் படி!..."

தாயின் சொல்லை அவன் கேட்பானா?...அவனுக்கு தனது படிப்பைவிட தாயின் நலன் தான் பெரிதாக தோன்றியது.

பொழுது புலர்ந்து வெகு நேரமாகிவிட்டது.

முனகியபடி படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறாள் பாலனின் தாய்.

"பாலா!..... இஞ்சவா!..." கிணற்றிலிருந்து ஒலிப்பது போலிருந்தது அவளின் குரல்.

"என்னம்மா?..."

"பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சுதெல்லே!... வெளிக்கிட்டுக் கொண்டு போவன்!..."

பாலா தாயை உருக்கமாக நோக்கினான்.

"நான் இண்டைக்கு பள்ளிக் கூடத்துக்கு போகேல்லையெணை..."

"போகேல்லையோ?........" அவனை விழித்து நோக்கினாள் அவள்.

"நீங்கள் இப்படியிருக்கேக்கை நான் எப்படியம்மா பள்ளிக்கூடத்துக்கு போறது... அதுதான் போகாமல் நிண்டு உங்களை ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கொண்டு போகப் போறன்!..."

தாய் அவனைப் பார்த்து பரிதாபமாக சிரித்தாள்.

"வேண்டாம் பாலா!...... நீ பள்ளிக்கூடத்துக்கு போணை ...நான் மெதுவாக ஆஸ்பத்திரிக்கு போட்டு வாறன்..."

தாயின் நிதானமான பதில் அவனுக்கு நம்பிக்கையூட்டுகிறது. இருந்தாலும் அவளின் உடல் நிலை இதற்கு ஒப்புமா என்ற கேள்வி அவனின் மனதில் எழுந்தது.

"இரண்டு நாளா சாப்பிடேல்லையெணை...பிறகு... றோட்டிலை எங்காலும் தலையை, கிலையை சுத்தி...மயங்கி விழுந்திட்டீங்களென்றால்?.." தாயின் முகத்தை ஆதரவுடன் நோக்கிய வண்ணம் கூறினான்.

"நீ பயப்படாதை பாலா ......நான் விழமாட்டன்......" என்று கூறிக்கொண்டு அவனின் முதுகை ஆதரவாக தடவினாள்.

"இண்டைக்கு சோதனைக்கு காசுகட்ட வேணுமென்று சொன்னனியெல்லே... இந்தா இதைக் கொண்டு போய் கட்டு" என்று கூறிக் கொண்டு தன் சேலை மடிப்பில் முடியப் பெற்றுக்கிடந்தகசங்கிய ஐந்து ரூபா தாளொன்றை எடுத்து அவனிடம் கொடுத்தாள்.

"அம்மா எங்காலையெணை இந்த காசு?...' ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

தாய் அவனை உருக்கத்துடன் நோக்கினாள்.

"அப்ப.. நேற்று வேலைக்கு போனீங்களோ?..." கோபத்துடன் கேட்டான்.

"இல்லை பாலர்......நேற்று நான் வேலைக்கு போகேல்லை... இந்த அஞ்சு ரூபா நீ போன கிழமை பழைய பேப்பர் பொறுக்கி வித்து போட்டு கொண்டு வந்து தந்தியே...... அந்த காசு தான்" என்றாள் அவள்.

"இர்விரவாக இருமுறீர்கள்...முட்டையை அல்லாட்டி மருந்தைக் கிருந்தை வாங்கி குடியுங்கோ...எண்டு சொல்லியெல்லே உந்தக் காசை தந்தனான்....... நீங்கள் என்னடா எண்டால் அதை சீலைத்தலைப்புக்கு முடிஞ்சு போட்டு இருந்திருக்கிறீங்கள்......... அதுதான் வருத்தம் பெரிசா வந்திருக்கு ...நீங்கள் என்னம்மா?"

"முட்டை குடிக்கிற காசு... எங்களுக்கு மூண்டு நேர சாப்பாட்டுக்கு காணுமெண்டுதான் வைச்சிருந்தனான். அது இருந்த படியால்தான் உனக்கு இப்ப உதவுது!......காசுக்கு மருந்து வாங்கி குடிக்க எங்களுக்கு கட்டுமா?... எங்களுக்கு எண்டு தானே ஆஸ்பத்திரியிலை நிறத் தண்ணி ஊத்துறாங்கள் ...நான் இண்டைக்கு போய் மருந்தெடுக்கிறன்...இந்தா!...... இதைக் கொண்டுபோய் கட்டு...படிப்பு தான் முக்கியம்...அதுக்கு பிறகு தான் மற்றதெல்லாம்..."

தாயாரை ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்று மருந்து வாங்கி கொடுக்க வேண்டுமென்பது தான் அவனின் விருப்பம். ஆனால், அது நிறைவேறாமல் போய்விட்டது. காரணம், அவனின் தாயின் பிடிவாதக் குணம் தான்.

பல மழையும் வெயிலும் கண்ட தனது வெளிறிய காற்

## விஷத்தை எதிர்க்கும் செடி!

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பலேடை பசார் நகரத்தைச் சார்ந்த 60 வயது காபோமியா என்ற விவசாயியை ஒரு பாம்பு கடித்து விட்டது. அதன்பின் சுமார் 15 நிமிடங்களில் அந்தப் பாம்பு இறந்துவிட்டது. சிலநாட்கள் கழித்து அவரை ஒரு நாய் கடித்தது. ஒரே நாளில் அந்தநாயும் இறந்து விட்டது. இதுபற்றி அவரிடம் கேட்டபொழுது "சவுந்த குசேலா" எனப்படும் காட்டுச்செடியைப் பல ஆண்டுகளாக உண்டு வருவதாகவும் அச்செடிக்கு நஞ்சை எதிர்க்கும் திறன் உண்டு என்றும் கூறினர்.

தகவல்: **செல்வி கே. தேன்மொழி**
அரணையக்க

சட்டையும், 'பொத்தல்' கள் பல போடப்பட்ட ஷேட்டையும் எடுத்து அணிந்து கொண்டு பணத்தை, காச்சட்டை பொக்கேற்றினுள் போட்டுக் கொண்டு பாடசாலையை நோக்கி நடக்க தொடங்கினுன்.

பாடசாலை முடிவடைந்து, மாணவர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வீதியில் நடந்து கொண்டிருந்த பாலனுக்கு அழுகை, அழுகையாக வந்தது.

ஏமாற்றம் ஒருபுறம், பழி வாங்க முடியவில்லையே என்ற உணர்வு மறுபுறம்...

கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை. எத்தினை நாள் அவன் நினைத்திருப்பான் 'காச்சட்டை 'பொக்கேற்' ஓட்டை தைக்க வேண்டு'மென்று. இன்றுதான் தனது கவலையீனத்தை முழுமையாக உணர்ந்தான்.

பரீட்சைக்கு கொண்டு வந்த காசை, காச்சட்டை 'பொக்கேற்' றினூடாக 'கோட்டை' விட்டு விட்டான். அதைவிட இன்று வகுப்பில் நடைபெற்ற நிகழ்ச்சி அவனின் வயிறை எரிய வைத்துக் கொண்டிருந்தது.

"சோதனைக்கு...... ......காசு தந்தாக்கள் ... கொண்டு வந்து தரலாம்..." என்று வகுப்பாசிரியர் சொன்ன போதுதான், பாலன் எழுந்து நின்றபடி 'பொக்கேற்' றினுள் கையை வைத்தான்.

அவனுக்கு 'பக்' கென்றிருந்தது.

கவனமாக தேடினுன். ம்!... இல்லை... மற்ற பொக்கேற்றிலள்! அதிலும் இல்லை.

தான் ஒருவன் மட்டும் தான் வகுப்பில் எழுந்து நிற்பதையும், தன்னையே அந்த வகுப்பு முழுவதும் உற்று நோக்குவதையும் அவன் உணரவில்லை. எவ்வளவு தேடியும் பணம் இல்லை.

"என்ன பாலா?......காசு கட்ட போறியோ?..." ஆசிரியர் கேட்டார். "காசை...... காணேல்லை சேர்..."

வகுப்பு முழுவதும் அவனை பார்த்து 'கொல்' என்று சிரித்தது.

அவனின் கசங்கிய காச்சட்டையும், கிழிந்த ஷேட்டும், பரட்டைத் தலையும், அவன் பணம் தேடிய விதமும்தான் அவர்களை சிரிக்க வைத்தது என்பது அவனுக்கு விளங்கவில்லை. வகுப்பாசிரியர் எழுந்து சென்றுர்.

"சேர்!... சேர்!....." பாலனின் வாய் தடுமாறியது.

> **நீர்ப்பாசனத்திணைக்களத் தமிழ் பண்பாட்டுக் கழகம் அனைத்திலங்கை அடிப்படையில் நடத்திய சிறுகதைப் போட்டியில் பாராட்டுப் பரிசு பெற்ற கதை.**

"நாளைக்குஒன்பது மணிக்கு ...காசெல்லாம் அனுப்பிபோடுவன்...அதுக்குள்ளை கொண்டு வந்து தா!...." மீண்டும் ஒரு தடவை வகுப்பே அவனைப் பார்த்து சிரித்தது. அத்தனை பேரையும் அடித்து நொருக்க வேண்டும் போலக் கிடந்தது அவனுக்கு. அதற்குள் அடுத்த பாடத்திற்கான ஆசிரியர் வந்து விட்டார்.

ஒரு மனிதனின் உடையையும், நடையையும் வைத்துதான் இந்த சமுதாயம் அவனை மதிக்கிறது. இல்லாட்டில் அவனிடம் எவ்வளவு அறிவுதான் இருந்தாலும், அவன் பேயன்... விசரன்... பைத்தியக்காரன்... இந்த இயல்பில் சமுதாயம் நன்ருக ஊறிப்போய்விட்டது.

பாலன் அந்த பாடசாலையில் அனுமதி பெற்றதிலிருந்து முதல் முதலில் நடைபெறும் பரீட்சையாதலினுல், எல்லா மாணவர்களுக்கும் ஒரு 'பாடம்' படிப்பித்து, அவர்களை பரீட்சை முடிவால் அடக்க எண்ணியிருந்தான். அதிலும் அவனின் எண்ணம் கைகூடவில்லை. நாளைக்கு பணம் கிடைக்கும்; கட்டலாம் என்ற நம்பிக்கை அவனுக்கு இல்லை. காலையில் குடித்த சாயத்தண்ணியின் சாயமும் வயிற்றிலிருந்து அகன்று வெகு நேரமாயிருக்கும். அதன்பின் பள்ளிக்கூட 'பைப்'பில் இருந்து மூன்று தடவை வயிற்றை தண்ணீரால் நிரப்பி விட்டான். என்ருலும் வயிறு கேட்பதாக இல்லை. அவனின் உடல் நன்ருக தளர்ந்து போயிருந்தது.

நகர மறுத்த கால்கள் தாயை நினைத்ததும் வேகமாக நடக்கத் தொடங்கின.

"அம்மா!.... இப்ப என்ன பாடோ?............ மருந்தெடுத்தாவோ?...... அவவும் பட்டினி தான்!.....நான் என்ன செய்யிறது?......பேசாமல் படிப்பை விட்டுட்டு எங்காலும் கடையிலை போய் நிக்கட்டோ;...... எவ்வளவு நாளுக்குதான் அம்மாவும்கஷ்டப்பட்டு உழைச்சுத்தாறது?......முந்தியதை போல அவவாலை இனி உழைக்க முடியாது?...அவவிட உடம்பு கேக்காது?.... அவவின்ரை உடம்பு நல்லா இளைச்சு போச்சு!...... நான் படிச்சு என்னத்தை கிழிக்கப் போறன்?...... ஒரு சோதனை எடுக்கேலாமல் கஷ்டப்படுறன். வேலை எடுக்கிறதென்ருு அது முயல் கொம்புதான்!......"

அவனுக்கு படிப்பே வெறுத்து விட்டது.

உணவைக் கண்டு இரண்டு நாட்களாகி விட்டன. இரவு பொழுது போக்க அவனின் மனதில் சிறிதொரு திட்டம்...

"என்னட்டை இருக்கிற புத்தகங்களையும், கொப்பிகளையும் கருவாட்டு கடைக்காரனுக்கு குடுத்தால் மூண்டு நாலு ருபா கிடைக்கும். மாவை, கீவை வாங்கி புட்டை, கிட்டை அவிக்கலாம் .. பேப்பர் விக்க பொடியன் இல்லையென்று பேப்

## வேஷம்!

வெளி உலகப் பார்வைக்கு
வெள்ளை மனம் கொண்டவர்தான்
ஒளி அணைந்த பின்னர்தான்
ஒத்திகைகள்; அரங்கேற்றம்;
களிகொள்வார்! விலைமாதைக்
கட்டித் தழுவிடுவார்!
விழிகாட்டும் உருபொய்யே
வேஷம் உணர்ந்திடுங்கள்!

—'ஆலையூர்த்தாசன்'

பர்கடை முதலாளி சொன்னவர். நான் போய் கேட்டால் எனக்கு அந்த வேலையை தருவார்?......என்ன படிப்பு?........ கண்டறியாத படிப்பு!...இராவிலை தியேட்டருக்கு போனால் கச்சான் விக்கலாம் ....."

சிறு உள்ளத்தில் பெரியதொரு திட்டம்!

சமுதாயம் ஒரு நாற்றின் நுனியை கிள்ளி விடுகிறது. மேலே வளர முடியாது!...பக்க கிளைகள் விட்டு வளர்ந்தால் சரி!

வீட்டினுள் நுழைந்தான்.

வாசலில்? ........

அவனின் கண்கள் ஆச்சரியத்தால் விரிகின்றன.

அந்த ஐந்து ரூபா கசங்கியதாள் அனாதரவாக கிடக்கிறது. எடுத்தபடி வீட்டினுள்ளே நோக்கினான். தாயார் படுக்கையிலிருந்து எழுந்திருக்கிறார். "அம்மாவுக்கு சுகம் போல கிடக்கு..."என்றெண்ணியவன், புத்தகங்களை பாயில் போட்டு விட்டு "அம்மா!... மாஸ்ரர் வீட்டை போட்டு வாறன்..." என்று விட்டு ஓடுகிறான்.

மீண்டும் மனதில் பழைய திட்டங்கள்.

"படித்து........"

காசு கையில் இருந்தால் மீண்டும் நழுவி விடுமோ என்ற எண்ணத்துடன் மாஸ்ரர் வீட்டை நோக்கி ஓடுகிறான். 'குதிகால்' என்னத்திலையோ முட்ட ஓடினான்" என்று சொல்வார்களே அந்த மாதிரி.

அவனும் மாஸ்ரர் வீட்டு வாசலில் கால்வைக்க, மாஸ்ரரும் எங்கிருந்தோ சைக்கிளில் வந்திறங்கவும் சரியாகவிருந்தது.

"சேர்!..........இந்தாங்கோ காசு!.. ...',

இழைத்தபடி நீட்டினான்.

"என்ன காசு?......"

"என். பீ. எஸ். ரீ... சோத னைக்காசு..."

"எட ராமா!...நீ நாளைக்கு எங்க கொண்டு வரப் போறும் எண்டு நினைச்சு...இப்பத்தான் அனுப்பி போட்டு வாறன்..." என்றார் அவர்.

"அப்ப நான் சோதனை எடுக்கேலாதோ?..." பரிதாப மாக கேட்டான்.

எல்லாம் அனுப்பிப் போட டன் ...இனி அனுப்புறது கஷ் டம். உனக்கு என்னத்துக்கடா சோதனை?......உந்தக் காசுக்கு ரெண்டு படம் பார்க்கலாம்...

அவருக்கு முன்னால் அவ அடிபட்டு படத்துக்கு 'ரிக்கற் வாங்குவதை எண்ணி கொண்டு கூறினார் வருங்கா சந்ததிகளை வளர்க்கும் அந் ஆசிரியர். ஆனால் அவன் 'ரி கற்'றை 'கள்ளமார்க்கட்'டி விற்று பணத்தைக் கொண் தான் கொப்பி, புத்தகம் வா கிறவன் என்று தெரிந்திரு தால் அப்படி சொல்லியிருக் மாட்டார்.

மீண்டும் துளிர்விட்ட நா றின் நுனி கிள்ளப்படுகிறது இனி அது பக்கக் கிளைகள் தா விடவேண்டும்!

(யாவும் கற்பனை)

## அவிந்த உணர்வுகள்

அவனோர் காளை — அறிவு ஜீவி —
இவனுக் கேற்ற இளமயில் அருகில்
அவன் அவளை அறிவால் பார்த்தான்
தவமுனிபோலிது சொல்வான்!
அன்பே அழகே அமுதூறும் தேனே! இனி
என்னால் உந்தன் எழிலை நுகர இயலாது
துன்பம் நிறைந்து துயருறுமுலகில்
எந்தன் மனதும் எழிலை ரசிக்க மரத்ததுவே!
நாளொரு விலையேற்றம் நானிலமெங்கும் போராட்டம்
பொழுதெல்லாம் உழைப்பவர்க்கும்
பொங்கியுண்டிடப் போதவில்லை
இந்த அவலத்தால் என்னிள நெஞ்சம் கொதித்தது
அந்த உணர்வுகள் அவிந்துவிட்டன கண்ணே!

—வதனு தம்பிஐயா




க. வேலாயுதம்

**7ம் பரிசு பெற்ற மணிக்கதை**

என் அம்மா கடவுள் பக்தி மிகவும் உடையவர். காவி உடை சடாமுடி, உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்களை அணிந்த வறியோர்களைத் தரிசிக்க நேர்ந்தால் அம்மா பக்திப்பரவசத்தில் அப்படியே உருகிப்போய் விடுவாள். அம்மாவின் இந்தப் பக்தி நிலை அப்பாவுக்கும் எனக்கும் நகைப்பைத் தரும். அம்மாவின் பக்தியைக் கிண்டல் செய்யும் முறையில் அப்பா காவி அணிந்தவர்களை சுத்தமான ஏமாற்றுப் பேர்வழிகள் என்று அடிக்கடி கூறுவதுண்டு. அம்மாவின் பக்தி விசேஷத்தினுல் தானே என்னவோ ஒரு நாள். சடாமுடி, கஷாயம், உருத்திராக்கம் போன்ற சிவசின்னங்கள் அணிந்து உடலெங்கும் கோடு கோடாய்த் திருநீற்றுப் பூச்சு இலங்க ஒரு சிவனடியார் எங்கள் இல்லத்துக்கு எழுந்தருளினுர். பிறகு அம்மாவை கேட்க வேண்டுமா? கூப்பிய கரங்களுடன் வாசலுக்கு ஓடிப்போய்ப் பணிந்து உபசரித்து அழைத்து வந்து வராந்தாவில் மான் தோலாசனம் இட்டு அதில் சுவாமிகளை எழுந்தருளச் செய்து பக்தி சிரத்தையுடன் பாதபூசை செய்து பணிந்து அறுசுவையுடன் அமுதளித்து அவர் ஆசி வழங்கி விட்டு விடைபெற்றுக் கொண்ட போது தான் வைத்திருந்த பத்து ரூபா நோட்டைக் காணிக்கையாக மிகுந்த பணிவுடன் சுவாமிகளின் கையில் கொடுத்தாள்.

அதை வாங்கிக் கொண்ட அந்தத் துறவி நோட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்து விட்டு அம்மாவை கனிவுடன் பார்த்து "அம்மையே ஆண்டியாகிய எனக்குப்பணம்எதற்கு? தர்ம சீலியான உன்னிடம் இந்தப் பணம் இருந்தால் இன்னெரு அடியாரின் பசியைப் போக்கும்" என்று கூறியவராக அம்மாவிடம் பணநோட்டைக் கொடுத்து ஆசீர்வதித்து விட்டுச் சென்ருர். அம்மாவின் அடியார் பக்தியை அப்பாவுடன் சேர்ந்து கேலி செய்து வந்த நான் நோட்டைத் திருப்பிக் கொடுத்த சுவாமியின் செயலைக் கண்டு எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ என்று வியப்படைந்தேன். அம்மா பேரானந்தமே அடைந்தாள். அதன் பிறகு சரியான செயல் இன்றி ஏக்கம் நிறைந்தவளாக காணப்பட்டாள். இரண்டு வாரங்கள் சென்றன. மீண்டும் அதே சுவாமிகள் எங்கள் வீடு தேடிவந்தார். அம்மாவுக்கு சாட்சாத் சிவபிரானையே நேரில் தரிசிப்பதைப் போன்ற பரவசம் - உபசாரம் உபசாரம் உணவளிப்பு எல்லாம் முடிந்து சுவாமிகள் போகப் புறப்பட்ட போது அம்மாவின் கொள்கைப்படி காணிக்கை கொடுக்க அவளிடம் பணமில்லை. ஆகவே கொடியில் கிடந்த அப்பாவின் அட்டைப்பையுள் தேடிய ஒரேயொரு ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து சுவாமிகளிடம் கொடுத்து வணங்கினுள். அந்த ஆண்டி முன்போல் நோட்டைத்திருப்பிப் பார்த்து விட்டு தனது காவி உடைக்குள் வைத்துக்கொண்டு அவசரமாக அவ்விடத்தை விட்டு அகன்று போனுர்.

(யாவும் கற்பனை)

## அவர் அப்படி!

— வண்ணக் கண்ணன் —

மாமி கட்டிக் கொடுத்த
மாளிகைச் சுவரில்
மாட்டப் பட்டிருக்கும்
மாவோவின் படம்!

கொடுத்த சீதனம்
கொள்ளா தென
அடித்த அடியினில்
அன்பு மனையாள்
சிந்திய செவ் விரத்தம்
சிவப்பு வர்ணமாய்ப் பூசிக்
கொண்ட
சுவர்கள் நிறைந்த மாளி
கைக்குச்
சொந்தக் காரன்!

கட்டிக் கொடுத்தவர்கள்
மனைவி மக்களை
மாளிகை வாசலை
எட்டிக் கூடப் பார்க்கவும்
இயலாத வகையில்
கட்டையும் சேர்த்துக்
கோருக்கப் பட்ட
கம்பி வேலி!

'போது முந்தன் சாலமே
புரியு முந்தன் வேசமே'
என்று,
மனதுக்குள் பாடிக்கொண்
டிருக்கும்
மனையாள் தினம் தினம்
வெறுத்துக் கொண்டிருக்
கும்
மகா! மகா! புருஷன்!!!

ஊருக்குத்தான் கொமியூ
னிசம்!
உனக்கும் எனக்கும்
'கொப்பனுானிசம்'
'கொம்மையூனிசம்'
என்னும்,
சித்தாந்தம் எழுதிக்
கொண்டிருக்கும்
சிறப்பு வாய்ந்த
செவ்வானப் படைப்பாளி!



**டாக்டர்:** சுகமான தூக்கமில்லாமைதான் இந்த வியாதிக்கு காரணம்...இரவில் நன்ருகத் தூங்க வேண்டும்...

**நோயாளி:** எப்படி டாக்டர் சுகமாகத் தூங்குவது...விஞடிக்கு விஞடி விசுவரூபமெடுக்கும் விலைவாசிப் பேய் தூக்கத்திலும் வந்து விரட்டுகின்றதே!

* * * *

"நானும் மகனும் வள்ளுவர் சொற்படி நடப்பவர்கள்"

"எப்படி?"

"மகனை 'வையத்து முந்தியிருப்பச்' செயல் ஆற்றினேன்...அவன் இப்பதவறணையில்எல்லோரையும் முந்தி இருப்பான்...'இவன் தந்தைக்கென் நோற்ருன் கொல் எனும் சொல்' படி அவன் சதா குடிப்பதற்குப் பணம் கேட்டு என்னைக் கொல்லாமற் கொல்லுருன்............ போதுமா?"

* * * *

**மனைவி:** என்னங்க! உங்க மகன் இப்பவே பொய்யையும், மெய்யையும் புரட்டுவதில் மகா சமர்த்தாயிருக்கிருனே.

**கணவன்:** அதுதானே, அவனை புரக்டருக்குப் படிப்பிக்கலாமென்றிருக்கிறேன்.

* * * *

**ஆசிரியர்:** (மாணவனைப் பார்த்துக் கேட்டார்) ஏண்டா மக்கு! கோழி ஒரு நாளைக்கு எத்தனை முட்டை இடும் என்ற கேள்விக்கு, 10 என்று விடை எழுதியிருக்கிருயே!

**மாணவன்:** ஒரு முட்டை என்பதற்குத் தான், ஒன்றுக்குப் பக்கத்தில் முட்டை கீறியிருக்கிறேன் சார்!

* * * * *

**ஒருவர்:** எஞ்சினியர் என்று சொல்லி"மெக்கானிக்" மாப்பிள்ளையைக் கட்டி அடித்து விட்டாயே.........

**தரகர்:** எஞ்சின் திருத்தும் வேலை செய்கிறவர் எஞ்சினியர் தானே ஐயா!

* * *

**பிச்சைக்காரர், 1:** இன்றைக்கு என் பிழைப்பு மகா வங்குரோட்டு.........

**பிச்சைக்காரர், 2;** இன்றைக்கு எந்தப் பக்கம் போனுய்?

**பிச்சைக்காரர், 1;** வங்கி ரோட்டுப் பக்கம்...

* * * * *

**ஹோட்டல் ஊழியர்:** என்னையா! சோற்றுக்கு ஊற்றிச் சாப்பிட வைத்த ரசத்தையெல்லாம் அப்படியே குடித்து விட்டீரே.

**நபர்:** மன்னிக்கவும்! நான் ரசாயனப் பரிசோதகர், பரீட்சித்துப் பார்த்தேன்; இது ரசமல்ல—தண்ணீர்!

**—கதிர் மாணிக்கம்**

---

**கணவன்:-** திருமணப் பதிவின்போது அன்பு செய்வதாக, மதிப்பதாக, கீழ்ப்படிவதாக சொன்னுயே...?

**மனைவி:-** "நல்லது...அத்தனை பேருக்கும் முன்னுல் நான் ஒரு விவாதத்தை தொடக்க விரும்பவில்லை"

* * * * *

**அவர்:-** "அந்த விபத்தில் அகப்பட்ட பையனுக்கு காயம் பெரிதோ......?"

**இவர்:-** அவனுக்கு காயமே இல்லை?... ஆனுல்...

**அவர்:-** "ஆனுல்......?"

**இவர்:-** "ஆள் குளோஸ்......

**—கண்ணன், தென்மட்டுவில்—**

---

**தந்தை:** "என்னடா இது, கணிதத்திற்கு 08 (எட்டு) மார்க்தான் போட்டிருக்கு. நீ 80 (எண்பது) என்று சொல்கிருயே......?

**மகன்:** "இது தான் இப்ப உள்ள கணித முறை. இதைப்பற்றி தென்னிலங்கை எம்.பி.க்களை கேட்டா விளக்கம் சொல்லு வாங்க.

* * * *

**வெளிநாட்டவர்:** "இந்த நாட்டின் கெளரவப் பிரஜைகள் யார்?

**உள்நாட்டவர்:** சந்தேகமில்லாமல் தோட்ட தொழிலாளர்கள்தான். ஏனென்ருல் அவர்களுக்கு சம்பள உயர்வு இல்லை. நல்ல வீட்டு வசதியில்லை என்ருலும் அவர்களை பற்றி ஆட்சியாளர்கள் பெருமையாக "நாட்டின் முதுகெலும்புகள்" என்பார்கள்.

**— ராம்ஜீ.**



# மாறுதல்கள்

**புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்**

எனது மனம் இன்று ஓர் நிலையில் இல்லை! அவள் வரையப் போகும் அந்தப் பதிலில் தான் எனது 'வாழ்வே' தங்கியுள்ளது. நல்லதோர் பதிலை அவள் நல்குவாளா?— சிந்தனை நெஞ்சில் சுழல்கிறது!

அவள்...........? —அவள்! ........எனக்கு அறிமுகமானது கூட சிறுகதைப் பாணியில் தான்! 'ஈழத்து இளந்தளிர்களை ஊக்கும் திங்கள் வெளியீடு' எனக் கொட்டை எழுத்தில் அட்டையை அலங்கரித்து மலரும் 'புத்தொளி' மாத இதழில் எனது கதைகள் பிரசுரமாக ஆரம்பித்த அவ்வேளைகளில் தான் அவளி......ன் அறிமுகம் எனக்குக் கிடைத்தது.

தங்களது ஆக்கங்களில் ஆத்மவளர்ச்சிக்கான அடையாளங்களை இனம் காண்கிறேன்! அவற்றில் மிளிரும் ஆழமிக்க கருத்துகள் அதைச் சொல்லும் பாணி எல்லாமே தங்கள் அறிவாற்றலையும் எழுத்துவன்மையையும் பறைசாற்றுகின்றன! -என்று 'அங்கிருந்து' வந்த மடலின் பின்பு நான் அந்த அறி'முகம்' 'இங்கு' கவனமாக வடிவெடுத்தது! 'இயற்கையே பிரளயமானாலும் உறுதியான எம் உறவை உடைக்க முடியாது!' — என. ஆணித்தரமாக எழுதிவிட்டு இனம் புரியாத ஏதோ......... ஒரு பயம் பற்றிக் கொள்ளவே (அவளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளும் திராணி யற்றவனாக) '...........அதாவது இலக்கிய உறவை!' என நான் மடல் வரைந்ததும்......- காவியங்கள் எந்த மூலைக்கு?

அகிலஈழரீதியில் 'புத்தொளி' நடாத்திய சிறுகதைப்போட்டியில்எனக்கு முதல் பரிசு கிடைத்தபோது கதையுடன் கூடவே என் நிழல்படமும் ('படமா அது?' என்பான் நண்பன்) பிரசுரமானது! அதைப் பார்த்து விட்டு ......'அன்பின் மன்மதனுக்கு!' என அழாக் குறையாக..............மறுமடல் மறுமொழியாக வந்த பின்பு தான் 'அங்கும்', 'அது' உண்டு என எனக்கு 'ஓடி' விளங்கியது!

இந்தக் காதல் மட்டும் வெற்றி பெற்றால்................! (அது கணக்கே வேறு) என்ற அங்கலாய்ப்பில் சதா சிந்தித்து சிந்தித்து அந்தப் பராக்கில் சென்று பாதையோரப் பள்ளங்களை நான் ஆழம் பார்த்த நாட்கள்.................அப்பாடா ஏராளம்! ஏராளம்! ஆரம்ப காலங்களில் வாரமோர் முறை மலர்ந்த மடல் முறை மாறி வாரம் மூன்றான பின்புதான் .........எனது 'பூர்வீகத்தையே' மனம் திறந்து நான் மடல் வரைந்தேன்!

சமுதாயப் படிகளில் நீங்கள் தாழ்வாயிருக்கலாம் ஆனால் புலமையில்.....................கொண்ட இலட்சியத்தில் நீங்கள் உயர்ந்தவன் தான்! — என பதிலுக்கு மடல் நிறைய (மனமும் நிறைய?) அவள் வரைந்தாள்!

அவளுக்கு கலையில் ஆர்வமுண்டு! என் 'சிபார்சில் வாசகர் விமர்சனத்தில் ஆரம்பித்த அவளது பெயர் 'புத்தொளி' இதழில் புதுக்கவி ஊடாகச் சென்று சிறுகதை ஈறானது! 'கலையுலகில் என்குரு.தாங்கள்' அடிக்கொரு தரம் அவள் இப்படி எழுதுவாள்.

**8ம் பரிசு பெற்ற**
**மணிக்கதை**

சாக்கடையாகிவிட்ட இந்தச் சமூகத்தை சந்தனத்தேக்கமாக்க தங்களுடன் தோள் கொடுத்துப் போராட நங்கை இவள் தயார்! இந்த சமூகத்தில் ஓர் மாறுதலை ஏற்படுத்துவோம்! — 'அங்கிருந்து' அண்மையில் வந்த மடலின் பின்பு தான் 'அம்முடிவில்' என் மனம் உறுதியானது!

ஆசைக்கு வெட்கமில்லை! நேர்மைக்குத் தடையுமில்லை! உள்ளக் கிடக்கையினைச் சொல்லா விடுவதாற்தானே தொல்லைகள் பல விளைகின்றன! என அழகு தமிழில் ஆரம்பித்து 'ஆங்கிலத்திலை எழுதினால்தான் மச்சான் காய் சுழரும்' என நண்பன் அட்வைஸ் பண்ணித் தொலைத்ததால்...'மை டியர்...' எனத் தொடங்கி; டிக்சனெறியும்(லிவ்கோ) கையுமாக ஆங்கிலத்தில் எழுதி முடித்து நான் போட்ட மடல்!

அவளது பதில் எப்படி அமையுமோ?

கிணிங்...கிணிங்!—என் சிந்தனையைக் குலைத்து வாசலில் தபால் மணி ஒலிக்கிறது! பரீட்சை முடிவை உடைக்கும் பரீட்சார்த்தி (பிறைவேற்) நிலை! கடிதத்தை பிரிக்கிறேன் ...ஆலாபனம் முடிகிறது!

கதை, காவியங்கள்என்பது வேறு! வாழ்க்கை என்பதுவேறு கற்பனையில் வளர்வன கதைகள். உயர்வாக வாழவேண்டியது வாழ்க்கை! வாழ்க்கைக்கென்று சில வரம்புகள் உண்டு. அந்தஸ்திற்கு மீறி வாழ்வை அமைத்தால் அது வாழ்வாக இருக்காது வெறும் விளம்பரமாகத்தான் இருக்கும்!

ஓ! மை கோட்!...நீயுமா... நீயுமா இப்படி?

கருத்தாலே மாறுதல்களை விரும்புகிற எத்தனையோ பிரமாக்கள் தங்களின் சொல்லுக்கும் செயலுக்குமிடையில்தான் மாறுதல்களைக் காட்டுவார்கள்! —என் நண்பன் அடிக்கடி கூறும் அந்த வார்த்தைகளே இப்போ என் மனதில் உறுதியாகிறது!

(யாவும் கற்பனை)

# கோடு தாண்டிய கோலங்கள்



அனலை-ஜே. இருபாலிங்கம்!

அவளுடைய குடிசையைக் கடந்து செல்லும் போதும் சரி அல்லது அவளே எதிர்ப்பட்டு விட்டாலும் சரி ஊர் ஒரு மாதிரித்தான் முகத்தைச் சுழித்துக்கொள்ளும். செல்லம் என்ற பெயரைவிட சின்னக் கறுப்பியின் பேத்தி என்றால் தான் எல்லாருக்கும் விளங்கும்.

அவளுக்கு அறிவு தெரிய முன்பே தாய் இறந்துவிட்டாள்.

அறிவு தெரிந்தென்ன அவலம் புரியுமுன்னே பேத்தியும் இறந்துவிட்டாள். இப்போது அவள். ஊரறிந்த விலைமகள். விலை மகள் என்று சமூகம் பழித்தது. பழித்த உலகம் தானே பயன் படுத்தியது:

ஊரில் தாழ்த்தப்பட்ட சாதி என்று ஒதுக்கப்பட்டவர்களின் குடும்பங்களுள் சின்னக் கறுப்பி குடும்பமும் ஒன்று. கோடையும் மாரியும் மாறி மாறி வருவதுபோல் அவர்கள் வாழ்விலும் பருவம் மாறும். ஐப்பசி பிறந்து விட்டால் வட மேற்குக் கரையில் மீனவர்கள் வந்து குடியேறுவார்கள். சித்திரை வரை தங்கியிருக்கும் அவர்களிடம் கூலிவேலை செய்வது, அவர்கள் கழித்து விடும் மீன் குஞ்சுகளை சேகரித்து ஊருக்குள் பண்டமாற்றுச் செய்வதென்று இவர்களின் வாழ்வு இனிப்பாக ஓடும். அவர்கள் போய் விட்டால் துன்பத்தின் சாயல்கள் இவர்கள் மீது படிந்துவிடும். அப்படி இப்படி என்று ஊருக்குள் கூலி வேலை செய்துஉயிரைப் பிடித்து வைப்பார்கள்.

கடற்கரை அமளிப்படும் ஆறுமாதமும் சின்னக்கறுப்பி தன்சாதிப்பெண்களுடன் கரையில் கூலிவேலைக்குப் போவாள். வீட்டிலே பேத்தி செல்வம். மகள் கண்மூடி விட்டாள். எப்போது மூடுவாள் என்று காத்திருந்தவன் போல் வேறொருத்தியுடன் ஓடிவிட்டான் மருமகன்.

பேத்தியும் அவளும்தான் குடிசையில்.........

மகள் மரணவாசலில் அவளின் கையைப்பிடித்து “ஆச்சி என்ர பிள்ளையை மட்டும் கவனமா வளத்து ஒருத்தன் கையில சேர்த்துப்போடு”......
இவளுக்கு அதுதான் இலட்சியம்

தன் பகுதியிலேயே ஒருத்தன் கையில் கொடுத்து விடுவாள் சின்னக்கறுப்பி காலம் கனிய வேண்டாமா? செல்லம் இன்னும் பெரிய பிள்ளை ஆகவில்லை”

மீன்பிடிப்பவர்கள் இன்னும் வந்து குடியேறவில்லை. ஊர்ப்பகுதியில் மிளகாய்த்தூள் மா இடித்துக் கொடுத்து, அப்படி இப்படியென்று வேலை செய்து கிடைக்கும் கூலியைக் கொண்டு நாள் போக்கினாள் சின்னக்கறுப்பி.

மீனவர்கள் வந்ததும் மும்முரமாக உழைத்து செல்லத்தின் காதுக்கு ஒரு வளையம் வாங்கிப் போடவேண்டும் என்பது அவளது ஆசை. அந்த நாட்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். அந்த நாட்களும் வந்தன.

சின்னக்கறுப்பி மும்முரமானாள்.

எழுபத்தைந்து இன்ஜின் வள்ளங்கள், முப்பது முப்பத்தைந்து முதலாளிகள் இருநூறு மீனவத் தொழிலாளர்கள் மாலையில் புறப்பட்டார்களானால் அதிக தூரம் ஆழ்கடல் சென்று திரும்ப அதிகாலையாகி விடும். சில முதலாளிகள் கடலுக்குப் போகமாட்டார்கள். சிலர் வாடிக்கு காவல்.

காலையில் தான் பெரும்பாலும் சின்னக்கறுப்பிக்கும் அவள்இனப் பெண்களுக்கும் வேலை.

கருவாடு காயப்போடுவது வள்ளங்களில் இருந்து மீன் இறக்குவது.........என்று வேலைகளை முடித்து ......பிறகுதான் சிந்தப்பட்ட மீன் குஞ்சுகளை ஒன்று சேர்த்து எடுத்துக் கொண்டு புறப்படுவாள்.

மீன்குஞ்சுப் பறியை முற்றத்தில் போடும்போது செல்லம் ஓடி வருவாள். இவள் சொல்லாமலேயே அவள் நல்லதைத் தெரிந்து கருவாடு போட எடுத்து வைந்து விட்டு மீதியை மீண்டும் பறிக்குள் போட்டு கறுப்பியிடம் கொடுப்பாள். கறுப்பி அவற்றை எடுத்துக் கொண்டு நிமிரும்போது மீண்டும் பேத்தியின் குறுக்கீடு .........இப்போது தேனீர்;

இவள் சீனி நக்கி தேனீர் குடித்துவிட்டு எழும்புவாள். வெள்ளாளர் பகுதியில் அவளின் பயணம் தொடங்கிவிடும்

பேத்திக்குக் கவலைதான், ஆச்சி இந்த தள்ளாத வயதிலும் இப்படி ஓடி ஓடி உழைப்பது-எனக்குத்தானே என்பதில் அவளது இதயம் கரையும்

கமக்காறிச்சி வீட்டுக்கு வந்தாள் கறுப்பி

"பிள்ள நாயப்பிடி பிடி பிள்ள அம்மா இருக்கிறவா...
......"

"ஆரது கறுப்பியா மீன் கொண்டு வந்தாத் தாறத்துக்கு என்னத்துக்கு அம்மாவும் ஆட்டுக் குட்டியும். எங்க எடு பாப்பம்" என்று சட்டிக்குள் வாங்கிக்கொண்டு கமக்காறிச்சியின் மகள் உள்ளே போய் விட்டாள்.

"இந்தச் சுடுமூஞ்சி தான் நிக்குது இதட்ட ஒண்டும் கேட்டு வேண்டஏலாது" என்று முணு முணுத்த கறுப்பி "பிறகு வாறன்" என்று விட்டு நடந்தாள். அடுத்த வீடு......

"தம்பி நாய் கட்டியா நிக்குது"

வீட்டுக்காரி வெளியில் வந்தாள்

மீன்குஞ்சுகளைக் கொடுத்து வெள்ளைச் செத்தல் மிளகாய் வாங்கினாள். மறு வீட்டில் அரிசி......மறு வீட்டில் பழைய சோறு......

ஒரு வீட்டில் கூறினார்கள்.

"கறுப்பி பின்னேரம் ஒருக்கா இங்கால வாறயா?

"என்ன வேலை கிடக்குது"

"அரிசி நனையப் போடப் போறன்"

"சரி அரிசியைத் தண்ணியில போட்டு வையுங்கள் வாறன்"

சின்னக்கறுப்பி தன் குடிசையை நோக்கி விரைந்தாள்.

"இண்டைக்கு நம்ம பாடு பிழையில்லை" என்ற படியே குடிசைக்குள் நுழைந்து பறியை ஒரு புறம் தொங்கவிட்டாள். முற்றத்தில் சீராக கருவாடு காயப் போட்டிருக்கிறாள்.



செல்லம். போட்டது மட்டுமல்லாமல் காவலும் இருக்கிறாள். இவளுக்கு மனம் நிறைகிறது.

செல்லத்தை சைகையால் அழைக்கிறாள்.

"மத்தியானத்துக்கு கூழ் காச்சு...வெள்ளைச் செத்தல் கொண்டு வந்தனான். நேற்றுக் கொஞ்ச மா மிச்சம் வச்சனான் அதையும் எடுத்து... நேரத்துக்குக் காச்சவேணும் நான் பின்னேரம் மா இடிக்கப் போகவேணும்" என்று இவ்வளவையும் சைகையாலேயேகூறினாள்.

தலையசைத்து விட்டுச் செல்கிறாள் செல்லம்.

மாலையில் மா இடித்து விட்டு குடிசைக்கு வந்தவளுக்கு திக்கென்றது. அழுது கொண்டிருந்தாள் செல்லம். ஒன்றும் கூறத் தெரியாமல் அழுது கொண்டிருந்த அவளைச் சுற்றும் முற்றும் பார்த்த. கறுப்பிக்கு விளங்கி விட்டது

மகிழ்ச்சியும் பயமும் மனதை நிறைத்தன.

செல்வம் 'பருவமடைந்து விட்டாள்.'

மகிழ்ச்சியைவிட பயமே சின்னக் கறுப்பியிடம் குடிகொண்டிருந்தது. அவளைப்பாதுகாத்து ஒருத்தன் கையில் கொடுத்து விட வேண்டும் என்ற எண்ணமே அவள் நெஞ்சில் பாரமேறியது. அதுவும் பிழைப்புக்காக வீட்டில் ஒரு நிமிடம்கூட இருக்காமல் ஓடித்திரியும் தன்னால் பேத்திக்கான காவல் வேலியை எப்படிந் போடமுடியும் என்று பிரமித்தாள்.

நாட்கள் செல்லத்தின் மீது அழகை அள்ளிக் கொட்டிச் சொரிந்து கொண்டு சென்றது. சித்திரைக்கு இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தன.

கறுப்பி வீட்டு முற்றத்தில் கருவாட்டுக் கும்பலில் கருவாடு தெரிந்து கொண்டிருந்தாள், உதவியாக செல்லம். செருமல் கேட்கிறது 'வாங்க முதலாளி....'

முதல் விஜயம். பாக்கி நின்ற கூலியை கறுப்பியிடம் கொடுக்கிறார். பல் வேறு அர்த்தத்துடன் அவரது பார்வை செல்லத்தின்மீது. "என்பேத்திங்க., வாய் பேசாது,..." கசிந்த கண்ணீரைத் துடைக்கிறாள் கறுப்பி. முதலாளியின் கண்கள் கசியவில்லை. கசிவுக்குப் பதிலாக காமப் பார்வை பாய்ச்சுகிறது.

போய் விட்டார்.

ஒரேயடியாக அவர் போக வில்லை. ஒரு நாள் அவரது வாடியின் முன்னல் சின்னக் கறுப்பி கருவாடு காயப்போட்டுக் கொண்டிருந்த போது வேண்டுமென்றே கறுப்பியைத் தேடி குடிசைக்கு வருகிறார்.

செல்லம் "ஆ...ஆ.. என்று கடற்கரையைக் கை நீட்டிக் காட்டுகிறள். அவர் சிரிக்கிறார். போகவில்லை முன்னேறுகிறார்.

செல்லம் பயந்து துடிக்க.....

குடிசைக்குள் இழுத்துச் சென்று...மானை வீழ்த்திய புலி முழுதும் தின்று விட்டு திமிரெடுத்துப் போனது போல் முதலாளி போய் விட்டார்.

மீன் குஞ்சுப் பறியுடன் குடிசைக்கு வந்தாள் சின்னக் கறுப்பி... பேத்தியின் கோலம் புயல் அடித்து ஓய்த்த பின் சோலையின் நிலையில்... கிழிந்த சட்டை கசங்கிய உடை. அவல மான கோலம்.

"ஆ...ஆ...ங்...ங்... சொல்லத் தெரியாமல் குமுறி அழுகிறள் செல்லம்... சின்னக்கறுப்பிக்கு விளங்கிவிட்டது மார்பில் அறைந்த படியே "யாரடி அவன்" சைகையாலேயே கேட்கிறள்.

கடற்கரையைக் காட்டுகிறள் அவள்.

இருநூற்றைம்பது பேரையும் அவளுக்குத் தெரியும். ஆனல் அவள் யாரை நினைப்பது? சின்னக்கறுப்பி தலைதலை என்று அடிக்கிறள்.

முயன்று முயன்று சைகையாலேயே அன்று வந்து போன முதலாளி என்பதை உணர்த்தி விடுகிறள் செல்லம்.

அவ்வளவுதான் எதிர் கொண்ட பாய்ச்சல் ஓய்ந்து விட்டது, சின்னக்கறுப்பியிடம் அதில் பயனில்லை என்பது புரிந்து விட்டது. உள்ளம் உள்ளுக்கே குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்க அவளைக் குடிசையுள் இருத்துகிறள். சைகையாலேயே "இதை யாருக்கும் சொல்லி விடாதே" என்று கூறுகிறள் அவ்வளவு தான்.

அப்படி ஒன்றும் நடக்காதது போலவே தன்னை ஆக்கிக் கொண்டாள் சின்னக் கறுப்பி. ஆனலும் அவள் உள்ளம் தன்னுள்ளே துடித்த துடிப்பு. அந்தத் துடிப்புத்தானே ஒரு வாரத்திலேயே கடற்கரையில் மீன் பொறுக்கிக் கொண்டிருந்த சின்னக்கறுப்பியின் உயிரை வாரிச் சென்றது.

செல்லம் அநாதையாகி இரு வாரங்கள் கழிந்து விட்டன.

தாம் வாழ்வதற்கே வாழ்வோடு போராடும் அவளது உறவினர்கள் ஏதோ தம்மாலியன்ற உதவி செய்யத்தான் செய்தார்கள்.

முதல் வந்து கெடுத்து விட்டுப் போன முதலாளி மட்டுமல்ல இப்போது வேறு பலர் வருகிறர்கள். அவனைப் போலவே நடந்து கொண்டு காசும் கொடுத்து விட்டுப் போகிறர்கள்.

இவளும் உடன் பட்டு விட்டாள்.

ஆச்சிதான் ஒரு குலுங்க லுடன் அதை மறந்து விட்டாளே அது தவறுனதில்லைப் போலும் என்று உலகமறியாத அந்தப் பேதை நெஞ்சில் பதிந்து விட்டது.

அது தவறென்றல் இவ்வளவு தெரிந்த ஆச்சி சும்மா விட்டிருப்பாளா? இதே கேள்வியில் அவளும் இணங்கி விட்டாள்.

முகம் சுழித்து உறவுகள் ஒதுங்கின.

இவள் தனித்து விட்டாள். நாளும் வருபவர்கள் கையில் திணித்த பணம் சித்திரை முடிந்து மீனவர்கள் போனதும் வெறுமையானது.... இனி என் செய்வது என்று அவள் திகைத்து நின்ற போது தான் ஊர்ப்பிரமுகர்கள் வந்து போகத் தொடங்கினர்கள். அவள் வாழ்வு இந்தத் திசை வழியாக திரும்பியது.

தன் பாதையில் நின்று "ஆச்சி என்ர பிள்ளைய மட்டும் கவனமாக வளர்த்து ஒருத்தன் கையில சேர்த்துப் போடு" என்ற அவள் தாயினதும் அதையே தன் இலட்சியமாகக் கொண்டு ஓயாது உழைத்த ஆச்சியினதும் ஆத்மாக்கள் துடித்துக் கொண்டு தான் இருக்கும்.

(யாவும் கற்பனை)

## முதல் தபால் முத்திரை

உலகில் முதல் தபால் முத்திரை சேர் ரோலண்ட் ஹில் என்பவரின் ஆலோசனையின் படி 6-5-1840 ம் ஆண்டில் பிரித்தானியாவில் வெளியிடப்பட்டது. அக் காலத்தில் பிரித்தானியாவை ஆண்ட விக்டோரியா இராணியாரின் "தலை" அந்த முத்திரையில் பொறிக்கப் பட்டது. இலங்கையில் முதல் தபால் முத்திரை 1-4-1857 ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இந்தியாவில் 1-7-1852 ம் ஆண்டில் வெளியிடப்பட்டது.

தகவல்: செல்வன் ஸ்ரீவசந்தகுமார்
ஆவரங்கால்

# பாரதியாம்.............பாரதி!

[ கடந்த இதழில் பிரசுரமான திரு. சச்சி. ஸ்ரீகாந்தாவின் ' எத்தனை எத்தனை பாரதிகள் ' என்ற கட்டுரையின் எதிரொலிகள் இங்கு பிரசுரமாகின்றன. ]

## பெயரோடு சேர்த்து அழைக்கலாமே!

"எத்தனை எத்தனை பாரதிகள்!" என்ற கட்டுரையின்படி பாரதி என்று அழைப்பதை விட சுப்பிரமணிய பாரதி என்று அழைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் புதுமைக்கவி என்னும் போது பாரதியார் தான் நினைவில் வருகின்றார். பாரதியார் என்றதும் தலைப்பாகையும் தடித்த மீசையும் உடைய பாரதியாரின் தோற்றமே மனத்திரையில் தோன்றுகின்றது. சுப்பிரமணிய பாரதியாரை பாரதி என அழைப்பதால் ஏனைய பாரதிகளின் வாழ்க்கை வரலாறு சிதையும், அவர்கள் இயற்றிய பாடல்களில் குழப்பம் மயக்கம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டுமாயின் அவர்களை அவர்களது பெயரோடு சேர்த்து பாரதி என அழைக்கலாந்தானே. பாரதிதாசன் என்றுதானே அழைக்கின்றோம். எனவே சுப்பிரமணிய பாரதியார் தவிர்ந்த ஏனைய பாரதிகளை அவர்களது பெயரோடு சேர்த்து பாரதி என அழைக்கும் பண்பை தமிழ் அறிஞர்களும் அன்பர்களும் தொடங்க வேண்டும்.

கெ. தர்மகுலராசா

2ம் வட்டாரம், நிலாவெளி

## வரவேற்கப் படவேண்டிய கருத்து

விடுதலைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரின் மேல் தமிழ்பேசும் மக்கள் கொண்டுள்ள பெருமதிப்பு, பேரன்பு காரணமாகச், செல்லமாக, சுருக்கமாகப் "பாரதி" என்றே குறிப்பிடுவதனால் பதினாறுக்கும் மேற்பட்ட பாரதிகள் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்துள்ளமையால் எக்காலத்திலும் சரி, எதிர்காலத்திலும் சரி, "எந்தப் பாரதி இதனைக் கூறினார்" என்னும் மயக்கம் — குழப்பம் — ஏற்படக்கூடாது என்ற நன்நோக்கம் கொண்டு, பேசும் பொழுதும் எழுதும் பொழுதும் பாடும் பொழுதும் பாரதிகளின் முழுப் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் என்ற கட்டுரை ஆசிரியரின் எண்ணமே எனது எண்ணமுமாகும்.

இவ்விதம் குறிப்பிடுவதன் மூலம் எதிர்காலத்தில் பாரதிகளின் முழுப்பெயர் தெரியாது திண்டாடும் நிலையையும் தவிர்த்துக் கொள்ளலாம். பாரதிகளின் தமிழ்ப்பணியினையும் நினைவுகூர்ந்து கொள்ளலாம்.

ஔவையார்கள் பலர் வாழ்ந்து தமிழ்ப்பணி செய்துள்ளார்களாயினும் இப்போது எம்மிடையே வழக்கில் உள்ள ஔவையார் பாடல் எந்தக் காலத்தில் எந்த ஔவையாரால் பாடப்பட்டன என்ற மயக்கம் — குழப்பம் — தமிழ்கூறும் நல்லுலகத்தில் இன்றும் நிலவிவருகின்றதாக அறிகின்றேன்.

பாரதிகளின் முழுப் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதி வருவதன் மூலம் — பேசிவருவதன் மூலம் — ஔவையார்களின் ஏற்பட்டுள்ள இன்றைய மயக்கம் — குழப்பம் — பாரதிகளின் பெயர்களிலும் ஏற்பட்டுவிடாவண்ணம் தவிர்த்துக் கொள்ளலாம், அல்லவா?

எழுதும் போதும் பேசும் போதும் ஏற்படுகின்ற சிறு சிறு சிரமங்களைப் பார்க்காது, பொருட்படுத்தாது, பாரதிகளின் பெயர்களை முழுமையாகக் குறிப்பிட்டுச் சிறிதளவிலாயினும் தமிழ்ப்பணி செய்வோமாக.

தெளிவான சரித்திரம் — வரலாறு— இல்லாமையாலேயே தமிழினம் இன்று தாழ்வுற்றிருப்பது போல எதிர்காலத்திலும் இவ்விதமான தாழ்ச்சிகள்— குறைபாடுகள்—ஏற்படாவண்ணம் காப்பதுவும் ஒருவகைத் தமிழ்ப் பணியே.

ச. முருகையா, திருக்கேதீச்சரம்

## சிறந்த பாரதி அவரே!

கடந்த மூன்று நூற்றாண்டுகளில் பதினாறுக்கு மேற்பட்ட பாரதிகள் இருந்தாலும் சுப்பிரமணிய பாரதியார் மட்டும் 'பாரதி' என அழைக்கப்படும் நிலை உருவாகி விட்டது என்பதன் அர்த்தம் அத்தனை பாரதிமாரையும் விட சுப்பிரமணிய பாரதியாரின் புகழ் மேலோங்கியுள்ளது என்பதே ஆகும்.

அந்தப்புகழ் அவரின் கவித்திறனுக்கு கிடைத்த பரிசு. அந்த பரிசை ஏனைய பாரதியார்களால் அடையமுடியவில்லை என்பதே அர்த்தம்.

எனவே சுப்பிரமணிய பாரதியாரை மட்டும் 'பாரதி' என்று குறிப்பிடும் வழக்கத்தை நாம் கைவிட வேண்டும் என நினைப்போமாகில் அந்தப்புரட்சிக்கவிஞன் பெற்ற பரிசை நாம் தட்டிப்பறிப்பதாகத்தான் முடியும். வேண்டாம் அந்த பறிசெயல். 'பாரதி' என்ற பெயர் புதுமைக்கவிக்கே அமையட்டும். ஏனைய பாரதியார்களின் வாழ்க்கை வரலாறுகள் சிதைவுறாமல் இருக்க வேறு வழியே கிடையாதா?

—அ. சுரேஸ்—
பேராதனைப் பல்கலைக்கழகம்.

## பாரதிதான் பாரதி!

"பாரதி" என்றால் அது சுப்பிரமணிய பாரதிதான் என்பது மக்கள் மனதில் இத்தனை ஆழமாக வேரூன்றிக் கிளைபரப்பி நிற்பதற்குக் காரணம் என்ன?........

அதேவேளை, ஏனையபாரதிகள் நிலையான இடத்தை மக்கள் மத்தியில் பெறாமல் போனதன் காரணம் என்ன?.........

படித்தவர்க்கும், பண்டிதர்க்கும், மட்டுமே கவிதைக்கனியைச் சுவைக்க முடியும் என்ற நிலை மாற்றி, சாதாரண மக்களும் புரியும்வண்ணம்- அவர்தம் உள்ளத்தில் பதியும்வண்ணம் சுவை புதிது, பொருள்புதிது, வளம்புதிது-சொற்புதிது சோதிமிக்க நவ கவிதை யென்நாளுமழியாத மகாகவிதைகளைப் படைத்து! பாரதிரக் குரலெழுப்பியவன் பாரதி என்பதனாற்றான்.

கோடானுகோடி விண்மீன்களுள் ஒரு துருவ நட்சத்திரம்போல் பதினாறுக்கு மேற்பட்ட பாரதிகளுக்குள் சுப்பிரமணிய பாரதியே "பாரதி" என்ற அழிக்கமுடியாத முத்திரையைப் பெற்றுவிட்டான்.

"நிலவூர் மஞ்சுதாசன்"
3ம் வட்டாரம் நிலாவெளி

---

## நமக்கேது படை ?

— எம். வசந்தி, புத்தூர் —

**அஹிம்சை, அன்பு என்று புத்தர் மொழி பேசுகிறார்**
**இம்சைகள் செய்தே எமை அழிக்க நினைக்கின்றார்**
**செம்மையாய் நாமும் செப்பிடவே நற்பாடம்**
**எம் கையில் ஏது படை எந்தன் பராபரமே ?**

## செய்தி கூறும் சேதி

"ஜனநாயகத்தைக் காப்பாற்ற அரசாங்கம் உறுதி பூண்டுள்ளதாம்"

ஐயையோ, யாழ்ப்பாணம் மீண்டும் எரியப் போகிறதோ, கடவுளே!

* * * *

"மட்டக்களப்புப் பகுதிக்கு ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாராகிறது என்று தமிழ் அமைச்சர்கள் தெரிவித்துள்ளார்கள்".

"சரிதான் தேர்தல் விரைவில் நடக்கப் போகிறது!"

* * * *

"லக்ஸ்பிறே பால்மாவின் விலை மீண்டும் குறைக்கப்பட்டிருக்கிறதாம்"

"குழந்தைகளுக்கான வார்ட் கட்டுற கொந்திருத்து யாருக்கோ கொத்தப்போகிறது"

* * * *

"சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு அளிப்பதைப் பற்றி அரசாங்கம் யோசிக்கப் போகிறதென்றால் ஏன் இப்படி அலறுகிறாய்?"

"ஐம்பது ரூபாய் சம்பளத்தைக் கூட்டிவிட்டு ஐந்நூறு ரூபாய் செலவாகிறமாதிரி சாமான்களின் விலையைக் கூட்டுவார்களே".

* * * *

"இலங்கையின் சர்வசன வாக்குரிமைப் பொன்விழாக் கண்காட்சி இங்கிலாந்திலே நடைபெற்றதாமே?"

"அப்படியானால் அது இரண்டாவது கண்காட்சியாக இருக்கவேண்டும். முதலாவது கண்காட்சிதான் யாழ்ப்பாணத்தில் மாவட்ட சபைத் தேர்தலின்போது நடைபெற்று விட்டதே?"

* * * * *

"வெளி நாட்டிலிருந்து வரும் சில பிரமுகர்களுக்கு இலங்கை மக்களைப் பற்றி புரிந்து கொள்ளக்கூடியதாக என்ன புத்தகத்தைக் கொடுக்கலாம்?"

"ஏன் நமது நாடாளுமன்ற ஹான்ஸாட் இருக்கிறதே அதைக் கொடுக்கலாமே"

**—மணி**

# கிராமிய இலக்கியம்

“ஈழக்குயில் இத்ரீஸ்”

கிராமியப் பாடல்கள் பலதரப்பட்டவை. இப்பாடல்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஏற்ப ஓசை. சொற்கள் என்பனவற்றால் வேறுபடுகின்றபோதும் இசையோடு பாடப் படுகின்ற, குறிப்பிட்ட கவிஞரால் இயற்றப் படாத பாடல்களாகும். இப்பாடல்களை நோக்கும் போது, பெரும் புலவர்களும், கிராமிய மக்களிடையே தோற்றுப் போவர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

நாட்டுப்பாடல் வரிசையில் மீன்பாடுந் தேனாடாம் மட்டுநகரின் தென்பால் அமைந்துள்ள சம்மாந்துறையில் கிராமமக்களிடையே உலவும் பலபாடல்களுள் ஒரு தாயின் இதயக்கருத்தை புலப்படுத்தும் சில பாடல்களைப் பார்ப்போம்.

உயர்கல்வி பெறும் நோக்கோடு வெளியூர் சென்ற தன் மகனை நினைத்துப் பார்க்கின்றாள் தாய் ஒருத்தி. அவள் இதயத்தில் தன் மகனுக்கு யார் பாதுகாவலாக இருப்பார்களோ — என்ற எண்ணம் இழையோடுகின்றது. தமது ஊரில் தன் மகனுக்கு அண்ணன், தம்பிமாரும், மற்றுமுள்ளோரும், தம்மோடு காவலாக இருந்ததனையும், தற்போது இறைவனைத்தவிர, வேறுதுணை நம்பகமானதல்ல என்பதனையும் எண்ணுகின்றாள் இப்படி—

“அண்ணனில்லைத் தம்பியில்லை
ஆர்துணையும் அங்கு இல்லை
படைத்த இறைவன் மகனே
பாதுகாவல் உங்களுக்கு...”

எவ்வளவுதான் இறைவனைப் பாதுகாவல் தேடிக்கொண்டாலும், பெற்றவள் அல்லவா? தான் இருப்பது போலல்ல என்றோ என்னவோ அவளின் நினைப்பு மாறுபடாதுள்ளது. தான் மகனின் நினைப்பால் எவ்வாறு உள்ளேன் என்ற நிலையைத் தன் மகனுக்கு ஒரு முறை எடுத்துக் காட்டவோ என்னவோ அத்தாயின் உள்ளம் பின்வருமாறு புலம்புகின்றது.

“ஈரலும் காஞ்சி
இரத்தமும் ஓடிவத்தி
பஞ்சாக ஒடுங்கிப்
பறக்கிறன் மக(ன்)உங்களால...”

வற்றாத அன்பு பொங்க, வடியும் உடம்பான தாய் எவ்வளவு மகனில்லா வேதனையை அனுபவித்த போதும் தன் மகன் ஒரு சீமானாக தன்முன் வந்து நிற்பதனை விரும்புகின்றாள். தான் வாடும் நிலையை அவதானிக்கும் மகன், அறிவில் பின் வாங்கிவிடுவானோ? தன் தாய்க்கு நம் உயர்ச்சியில் விருப்பம் இல்லை என நினைத்திடுவானோ என்று பல வாறெல்லாம் எண்ணியவள் தன் விருப்பத்தினையும் கூறிவிடுகின்றாள்.

“அந்தி விடிஞ்சி
அநுதினமும் நாங்கழுதம்
சீர்செய்ய மகனார் - ஒரு
சீமானாய் வந்திருங்க...”

நாங்கள் உன் நினைவில் வாடி அழுது கிடக்கின்றோம். அப்படி அழுது உனையே நினைத்துக் கிடக்கும் எங்கள் முன் சீமானாக ஓர் அறிவு மேதையாக - ஒரு புனித மனிதராக வருக மகனே! - என தனது துயரத்தைக் கூறிய தாய், மகனின் சிந்தைக்கும் தெளியூட்டுகின்றாள்.

மகனின் பிரிவினால் ஏற்பட்ட துயரினையும் மகனின் வருகை எவ்வாறு அமைய வேண்டும் என்பதனையும் நினைத்துக் கவி பாடிக் கொண்டிருந்த தாய்முன் ஒரு காகம் வந்து கரைகிறது. அக்காகத்தை அவதானிக்கின்றாள் - அது தமது பகுதியில் சீவிக்கும் காகமல்ல, என்பதனை அதன் ஓசையிலிருந்து அறிகின்றாள். “காகம் ஒரு சாஸ்திரி” என்று பழங்காலம் தொட்டே உலவும் கதையும் அவள் நினைவுக்கு வருகிறது. எனவே அக்காகத்திடம் தன் மகனின் நிலைபற்றி வினவுகின்றாள்.

“மன்னாருக் காகம் - நீ
மனஙி வைச்சிக் கத்துகின்றாய்
என் மகனார் படுக்கும்
மாளிகையைச் சொல்பாப்பம்...”

தன்னருகில் வந்து கரைந்த காகத்திடம் தன் மகனின் செய்தி விசாரித்த தாய் தன் மகனின் “திருவுருவம்” சுவரில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும் மேலும் அவள் மனக்கிடங்கில் உதித்த பாடல் இது.

“பொன்னெழுத்துப் பீங்கானில
பூப்பறிச்சி வைச்சாப்போல்
எங்கும்பள பளப்பு, இலங்குதுகா
என், மகனார் முகம்...”

பொன்னெழுத்துப் பீங்கான் என்பது பொன்னிற எழுத்துப் பொறிக்கப்பட்ட பீங்கான் என்பதாகும். பீங்கானில் பொறிக்கப்பட்ட அவ்வகைப் பொன்னெழுத்துக்கள் மங்குவதில்லை. அந்தப்பீங்கான் மனதாகவும், பொன்னெழுத்து என மகன் முகத்தையும் ஒப்புவித்தாள். என்றும், நாம்நயந்துகொள்ள முடியும். எனவே, அத்தாயுடன் சேர்ந்து நாமும், அந்தச் சீமானின் வருகையினை எதிர்பார்ப்போமாக.

# மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை நடத்திய சிறுகதை / கவிதைப்போட்டி முடிவுகள்.

## சிறுகதை.

முதற்பரிசு ( ரூ. 300/- )

" காலம் கற்றுத் தந்தபாடம் "

எழுதியவர் : செல்வி பரமா சண்முகம். தியேட்டர் வீதி, ஏறுவூர், செங்கலடி.

இரண்டாம் பரிசு ( ரூ. 200/- )

" மீறத்துடிக்கும் சில மனங்கள் "

எழுதியவர் : மண்டூர் அசோகா. மண்டூர் - 1.

மூன்றும் பரிசு ( ரூ. 100/- )

" தொங்கு தோட்டமும் இறங்குபடிகளும் "

எழுதியவர் : திரு. க. சபாரெத்தினம், ஆரையம்பதி.

## கவிதை.

முதற் பரிசு ( ரூ. 200/- )

" மூடுபனி விலகுகையில் "

எழுதியவர்: திரு. பொன். சிவானந்தன், மண்டூர் - 1.

இரண்டாம் பரிசு ( ரூ. 150/- )

" ஒரு வழக்கு "

எழுதியவர்: திரு. கா. ஜீவரத்தினம் ( ஜீவா ) துறைநீலாவணை, கல்முனை.

மூன்றும் பரிசு ( ரூ. 100/- )

" பயணம் "

எழுதியவர்: செல்வி அகிலா கனகசூரியம், அரசாங்க விடுதி, கல்லடி.

தகவல்: இரா. நாகலிங்கம். போட்டி அமைப்பாளர்

---

## என் பா !

" கோலேந்தி "

வந்தால் உடனேயே வரவேற்றுத்தாளிலிடம்
தந்தால் கவிதை ! தவறுமெனில் — எந்தமுறை
கொண்டுமிக விதையினைக் கொணர்தல் இயலாது !
கண்டபடி கீறலாம் காண் !

காலம் இடையாது ! கட்டுக்குள் நில்லாது !
கோலம்பல வாறு கொள்ளு மது ! — ஞாலத்தில்
எந்தக்கலை தானும் ஈடாக மாட்டாது !
செந்தமிழ்க் கவியின் திறம் !

## தார்மீகமாம் தமிழரே '

— திருக்கோணமலைக்கவிராயர் —

' தார்மீகம் ' என்று பேராலே இங்கு
' தர்பார் ' நடாத்துவோர்கள்,
பார் மீது சுற்றிப் பல நாட்டில் தங்கள்
பம்மாத்தைச் சாற்றுவோர்கள்
' போர் ' என்ற ஒன்று பார்க்கின்ன லென்று
தீர்மானம் போடுவோர்கள்
வேரோடு தமிழை விரைவாகச் சாய்த்தல்
தார்மீகமாம் தமிழரே .........!

(முன் பக்கத் தொடர்ச்சி)

### உணர்வூட்டும் கவிப்படைப்பு'

ஆனி 'சுடர்' கருத்துப்படி கட்டம் 5. அமையுமா? பொறுத்திருந்து பார்ப்போம். "இளங்கோ அமீர்" தந்த "உள்ளக்குமுறல்.' உணர்ச்சியூட்டும் கவிப்படைப்புதான். அவன் செய்த பாவமென்ன? கவிப்படைப்பும் அருமையான படைப்பே.

'அக்கரைப்பூக்கள்' மூலம் அரிய தகவல் பெற்றேம்.

அ. சுரேஸ்
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்.

### 'கடிதம்' போல் வராதே!

தந்திபோல் வாசுடரே! கடிதம் போல்நீ,
தாமதித்து வரவேண்டாம்! மாதாமாதம்
வந்திடுநீ! தேதிஒன்றில் முந்திமுந்தி
வருகையது தாமதித்தால் வருத்தம்தானே?
'இலக்கியத்தில் தாகமுள்ள இதயமெ'ல்லாம்
இனிக்கின்ற 'உன்வரவால் உவகைபொங்கி
நிலத்தின்மிசை வாழுதற்கு நீதான் மூலம்
நிச்சயமாய் "தாமதித்து வரவே வேண்டாம்!"

—'ஆலையூர்த்தாசன்'—
அஞ்சல் அலுவலகம்
ஆலங்கேணி.

### 'பசுஞ்சோலை' கண்டேன்.

"பாலைவனப் பரப்பி னிலே
பசுஞ் சோலையைக் கண்டதுபோல்
ஆனி மாத 'சுடர்' இதழ் கண்டேன்
அளவில்லா மகிழ்வு கொண்டேன்.

மணியான கதைகள், கட்டுரைகள்
மகுடம் வைத்தாற் போல் கவிதைகள்
முற்றிலுமொரு அறிவுக் களஞ்சியமாய்
முழுமை பெற்று ஜொலிக்கிறது

எம். சுரேந்திரன்.
மீத்தொட்டமுல்ல
வெல்லம்பிட்டி

### மணி தந்த பிணி!

ஆனி இதழ் அழகு தோற்றம் தலையங்கம் முதல் அம்சங்களுமே தங்கம்—ஆனால் ஒரு குறை—மணியின் நகைச் சுவைத் துணுக்குகள் (இரண்டுதவிர) சிரித்திரனிலும் ஏககாலத்தில் வெளிவந்து குழப்பத்தை ஏற்படுத்திவிட்டன.

மா. ஐயரகு
அச்சுவேலி வடக்கு
அச்சுவேலி

### அட்டைக்கு மெருகேற்றுங்கள்!

ஆசிரிய தலைப்பில் கொடுத்த இடைவேளையும் அதன்பின் நிகழ்வுகளும்தான் பயங்கரமாக நடந்து கொண்டு இருக்கின்றதே. ஆனால் தடுத்து நிறுத்தும் திட்டமிடல் எமக்குத் தெரியவில்லையே. சுடரின் பரிசுக்கதை எதிர் பார்ப்புகளும் ஏமாற்றங்களும் கற்பனையேயல்ல. மிகவும் யதார்த்தமான கதை. கதாசிரியருக்கும் சுடருக்கும் பாராட்டுக்கள். அக்கரைப்பூக்கள், அரியின் மனம்விட்டு சிலவார்த்தைகள் அனைத்தும் நன்றாக அமைந்துள்ளன. அட்டைப்படத்தை இன்னும் மெருகேற்றுங்கள்.

வாசுகி செல்வா தம்பிஐயா
மண்டைதீவு

### தவிர்க்க வேண்டிய் குறைபாடு!

ஆனிமாதச்சுடர் கண்டு ஆனந்தமடைந்தேன் "இடைவேளைக்குப்பின்...?" என்ன நடக்கும் என்ன செய்யவேண்டும் என்பதை தக்க முறையில் கூறியுள்ளீர்கள். "இப்படியுந் திருமணங்கள்" உண்மையில் நடந்த நடக்கக் கூடிய கதைதான் என்றாலும் ஷரீஃபாவின் மனேபாவம் எத்தனை பெண்களுக்கு வரப் போகின்றது. பரிசுக்கதையும் தரமானதே. மணிக்கதைகள் மணியாகவே உள்ளன. மேலும் ஆனிமாதச்சுடரில் 'அறுவை' பகுதியில் வந்த துணிக்குகள் ஆவணிமாதச் சிரித்திரனிலும் வந்துள்ளதே (உ+ம்) "உமியிலிருந்து சீமெந்து செய்யப்போகின்றார்களாம்." "ஐய்யோநெல்லின்விலை மேலும் ஏறப்போகுதே" இவ்வாறாக மேலும் நான்கு துணுக்குகள் வெளியாகியுள்ளன. இரண்டும் தரமான இலங்கைத்தமிழ்ப் பத்திரிகை என்பதாலும் இக்குறைபாடு தவிர்க்கவேண்டியதே.

கெ. தர்மகுலராசா
நிலவெளி.

### ஓரணியில் திரள்க!

ஆனிமாத சுடரில் வெளிவந்த சிறுகதைகளில் அனலை இராசேந்திரம் அவர்களின் "சிறுகதை" தனித்து நிற்கிறது. "இளங்கோ அமீரி"ன் உள்ளக்குமுறல் கேட்டு எல்லா தமிழ் பேசும் இனத்தினரும் ஓரணியில் திரள வேண்டும்.

தா. மனேகரன்
ம. நந்தினி,
க. காந்தன்
(தமிழ் ஈழம்)

## மாணவ மணிகளே!

உங்கள் சீருடைகளை துரிதமாகவும் மேலும் பிரகாசமாகவும் சலவை செய்ய "மில்க்வைற் சலவைப்பவுடரை" வாங்கி உபயோகியுங்கள்.

மேலுறைகளை சேகரித்து அனுப்பி மில்க்வைற் அப்பியாசக் கொப்பியையும், அறிவு நூல்களையும், மில்க்வைற் செய்தியையும், மற்றும் பெறுமதி வாய்ந்த பரிசுகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**"மில்க்வைற்"**

த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்,
தொலை பேசி: 7233.





## "சுடர்" நண்பர் வட்டம்

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுது போக்கு விபரக்குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

**சுடர் நண்பர் வட்டம்**
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு — 12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 13-00
ஒரு ஆண்டு — 25-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,

இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா ..........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.




இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு—12இல் உள்ள
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.